செந்தமிழ்

தொகுதி 82 — மார்ச் 88 — பகுதி 1

5018

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM

தமிழ்ச் சங்கம் * MADURA TAMIL SANGAM

— உள்ளே —

மனித உரிமை

ரோமன் எழுத்துகளும் தமிழும்

புதுமைப்பித்தனும் புதிய உத்தியும்

திருக்குறள் ஆய்வகம்

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

ஆசிரியர் என். எஸ். முத்துமலைச்சாமி பி.ஏ., பி.எல்.,

செந்தமிழ்

தொகுதி 82 — மார்ச் 88 — பகுதி 1

பொருளடக்கம் பக்கம்

1. மனித உரிமை —டாக்டர். பழனி அரங்கசாமி 1

2. பிராகிருத மொழியின் புதிய அகராதி 7

3. துரியனுக்கு வந்த துணிச்சல் 8

4. வடமொழியின் சம்பு காவியங்கள் 9

5. ஆய்தம் பற்றிய ஆய்வு
பண்டித புலவர். வை. தங்கமணி எம்.ஏ; பி. லிட் 10

7. சங்க இலக்கியங்களில் நகைச்சுவை
டாக்டர். ப. பழனியம்மாள் 19

8. ரோமன் எழுத்துக்கள் தமிழை வளர்க்குமா? 26

9. புதுமைப்பித்தனும் புதிய உத்தியும் 29

10. கடல் கடந்த கண்ணன்
பி. ஆர். ஸ்வாமி 30

11. கவிதை நூல் — வெளியீட்டு விழா 37

12. நூல் மதிப்புரை. 32

13. மகளிர் தொண்டு — கவிதை 41

14. நூலாசிரியர் மாநாடு — இந்தியத் தலைநகரில் 42

15. திருக்குறள் ஆய்வகம் - ஓர் அறிவிப்பு 44

பொறுப்பாசிரியர் — டாக்டர் பழனி. அரங்கசாமி

மனித உரிமைகள்

டாக்டர். பழநி அரங்கசாமி

இரண்டாவது உலகப்போர் (1939-45) நிகழ்ந்தபோது அடால்ப் ஹிட்லரின் தலைமையில் போரிட்ட ஜெர்மானிய நாஜிசப்படையினர் தம்மிடம் அகப்பட்ட போர்க்கைதிகளை பயங்கரமாகக் கொடுமைப்படுத்தினர். குறிப்பாக யூதர்களே அங்கு பெரிதும் கொல்லப்பட்டனர். எந்தவிதமான ஊட்டச்சத்தும் இல்லாத உணவினை மிகவும் குறைந்த அளவே கொடுத்து உயிரோடு வைத்து கொஞ்சம் கொஞ்சமாக அவர்களைக் கொன்று விடுதல்; போதிய காற்றும், வெளிச்சமும் இல்லாத கொட்டகைகளில் அடைத்து விட்டு அவர்களை விலங்குபோட்டுச் சித்திரவதை செய்தல்; வரிசையாக நிற்க வைத்து பீரங்கிகளால் சுடுதல்; ஆறடி நீளக் குழிகளைத் தோண்டச் செய்து அதிலேயே அவர்களை உயிரோடும் சுட்டும் புதைத்து விடுதல் போன்ற கொடுஞ் செயல்கள் அவற்றுள் குறிப்பிடத் தக்கவை. இவை எல்லாவற்றுள்ளும் மிக அதிர்ச்சிதரும் முறையில் போர்க்கைதிகளை நூற்றுக் கணக்கில் பெரிய அறைகளுக்குள் அனுப்பி அறைமுழுதும் கொடிய நச்சுக் காற்றினைப் பரப்பிக் கொல்லுவது. நாகரீகத்தின் உச்சநிலையில் மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் இருபதாம் நூற்றாண்டிலும் இத்தகு காட்டுமிராண்டிச் செய்கைகளா? சொல்லொணாத இத்தகைய நாகரீகமற்ற கொடுமைகளின்றும் மனித உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு இந்நூற்றாண்டின் ஐம்பதுகளில் உலக நாடுகளிடையே பரவலாக எற்பட்டது. 1947 ஆம் ஆண்டிலேயே எலியனூர் ரூஸ்வெல்டு தலைமையில் மனித உரிமைகளின் பாதுகாப்புக்கென்று சில நியதிகளை உருவாக்கினார்கள். உலக அமைதிக்கென்று ஐக்கிய நாடுகள் சபையினை நிறுவியபோது மனித உரிமைகளும் காக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் இயற்றி அதனை ஐக்கிய நாட்டுப் பெருமன்றத்தின் சட்டதிட்டங்களிலும் இடம்பெறச்செய்தனர். 1948 முதல் ஆண்டு தோறும் டிசம்பர் திங்களில் ஐ. நா வின் ஆதரவில் மனித உரிமை தினம் உலகமெங்கணும் கொண்டாடப்படுகிறது. மனித உரிமைகளின் பாதுகாப்புக்காக 1966-ஆம் ஆண்டு ஒரு மாநாடும் நடத்தி நூற்றுக்கு மேற்பட்ட உலக நாடுகள் அதில் கலந்துகொண்டு ஒட்டு மொத்தமான தீர்மானங்களில் கையொப்பம் இட்டுள்ளன.

இந்த அடிப்படையில்தான் அகில உலக மன்னிப்பு நிறுவனம் (Amnesty International) பற்பல நாடுகளில் தனது கிளை அலுவலகங்களை நிறுவி மனித உரிமைக்காகப் போராடி வருகிறது. 1977-ஆம் ஆண்டு இந்த நிறுவனத்துக்கே நோபெல்பரிசு கொடுக்கப்பட்டது. இங்கிலாந்தில் வழக்கறிஞராக இருந்த பீட்டர் பென்சன் 1961-ஆம் ஆண்டு இதனைத் தொடங்கினார். லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு பணி புரிகின்ற இந்நிறுவனம் இதுவரை அநீதியாகத் தண்டிக்கப்பட இருந்த பதினையாயிரத்துக்கு மேற்பட்ட அரசியல் கைதிகளைக் காப்பாற்றி உள்ளது.

மனித உரிமைகள் எந்த நாட்டில் மீறப்படுகிறதோ. அந்த நாட்டைக் கண்டிப்பதோ, தண்டிப்பதோ இந்த நிறுவனத்தால் ஆகாதெனினும், தவற்றினை சுட்டிக் காட்டி பிற நாடுகளின் கவனத்தை ஈர்த்து குற்றம் புரிந்த நாடு மீண்டும் அதனைச் செய்யாதவாறு ஒரு தடுப்பு சக்தியாகப் பணிபுரிகிறது தன்னுடைய கிளை நிறுவனத்தின் மூலம் குறிப்பிட்ட நாட்டின் மனித உரிமை மீறல் செய்திகளை யெல்லாம் தொகுத்து அவற்றை அந்த நாட்டின் அரசுக்கு இந்த நிறுவனம் அனுப்பி விளக்கம் கேட்கும். உண்மைதானா என்று வினாவினை விடுக்கும்: பதிலொன்றும் வாராமல் போயின், அச்செய்திகளை யெல்லாம் தனது அறிக்கையில் வெளியிட்டு விடும். சிங்களப் படையினர் தமிழ்க் கைதிகளைக் கொடுமைப்படுத்திய நிகழ்ச்சிகளையெல்லாம் தேதி வாரியாகத் தொகுத்து இந்த நிறுவனம் இலங்கை அரசினைக் கண்டனம் செய்து அச்செயல்களைச் செய்யக் கூடாது என்று வேண்டுகோளும் விடுத்துள்ளது

அகில உலக மன்னிப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளை அதன் தொடக்க நிலையிலேயே தொண்ணூறு நாடுகள் ஒத்துக் கொண்டு 'நாங்கள் மனித உரிமைகளை மீறிய கொடுஞ்செயலைச் செய்ய மாட்டோம்' என்று முழுமனதோடு கையெழுத்திட்டுள்ளன ஆனால் நடப்பதென்னவோ எதிரான செயல்கள் தாம். 1987-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த உலக நிறுவனம் ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது. மதத்தின் அடிப்படையிலும் அரசியல் காரணங்களை முன்னிட்டும் மக்கள் எந்தெந்த நாடுகளில் எப்படி எப்படியெல்லாம் கட்டுப்படுத்தப்படுகின்றனர்; தொல்லைக்கு ஆளாகின்றனர் என்பதைப் பட்டியலிட்டுக் காண்பித்துள்ளது. 129 நாடுகளிலிருந்து குறிப்புகளும் புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

எந்த வித ஆதாரமோ காரணமோ இல்லாமல் கைது செய்தல், விசாரணையின்றி நெடுங்காலம் சிறைப்படுத்தல், மேல்முறையீட்டுக்கு அனுமதியின்மை ஆகியவற்றோடு சிறையிலும், வெளியிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் சித்திரவதை செய்தல் ஆகியவை இற்றை நாட்களில் காணப்படும் உரிமை மீறிய குற்றங்களாகும். சவூதி அரேபியா, குவைத், ஈரான் போன்ற அராபிய நாடுகளில் குற்றவாளி என்றுமுடிவு செய்யப்பட்டோருக்குக் கசையடியும், கை காலை வெட்டலும் சாதாரணத் தண்டனைகள் ஆகும். மைதானங்களில் கழுத்தளவு வரை மனிதனைப்புதைத்து, அருகில் குவிக்கப்பட்டுள்ள கருங்கல் குவியலிலிருந்து அவனைக் கல்லால் அடித்தே கொல்லுதலும் அந்நாடுகளில் வழங்கப்படும் ஒரு தண்டனையாகும்.

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் மின்சக்தியை உடலில் பாய்ச்சிச் சித்திரவதை செய்வது உண்டு. உடல் துன்பம் கொடுப்பது மட்டுமன்றி, மனோரீதியாக மக்களைக் கொடுமைப் படுத்துவதும் உரிமை மீறிய செயலாகும். ரஷ்யாவில் அரசினருக்கு எதிராகச் சிந்தனையே செய்ய முடியாது. எல்லா இடங்களிலும் அரசினரின் மறைமுகமான கண்ணோட்டம் இருந்து கொண்டே இருக்கும். எந்த மதக் கொள்கையினையும் யாரும் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க கூடாது என்பது கம்யூனிச அரசின் கடுமையான சட்டதிட்டம். ரூமேனிய நாட்டின் குடியரசுத்தலைவரை எதிர்த்து ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்ட கட்டிடப்பணியாளர் ஒருவருக்கு ஒன்பது ஆண்டு கடுங்காவல் தண்டனை கிடைத்தது. செக்கோஸ்லாவியா நாட்டில் அமெரிக்க வானொலிச் செய்திகளைக் கேட்பது மாபெரும் குற்றம். சமூகத்தைக் கேலியும் கிண்டலும் செய்கின்ற நூலை எழுதி வெளியிட்டதற்காக எட்வர்டு வாசெக் என்பவருக்கு அந்நாட்டில் நான்காண்டுகள் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல. ஜார்ஜ் ஆர்வெல் எனும் ஆங்கில எழுத்தாளரின் புகழ்பெற்ற நூலான மிருகப்பண்ணை (Animal Farm) என்னும் நூலை அவர் வைத்திருந்ததும் ஒரு பெருங் குற்றமாகக் கருதப்பட்டது. இந்நூலின் ஆங்கிலப்பிரதி உலக முழுதும் லட்சக்கணக்கில் விற்றுக் கொண்டிருக்கிறது என்பது நாம் நினைவிற் கொள்ள வேண்டிய செய்தி. நம் நாட்டில் பல்கலைக் கழகங்களில் அந்நூலைப் பாடமாகவும் வைத்துள்ளனர். எட்வர்டுக்குச் சிறைத் தண்டனை அளித்த அந்நாட்டு நீதிபதிகளின் கருத்துப்படி ''மனித சமுதாயம் மிருகங்களுக்கு ஒப்பிடப்படுவதே'' அந்நூலில் காணப்படும் குற்றமாகும். அந்நூலில்

பொதிந்துள்ள நகைச்சுவை உணர்வும், உள்ளுறையான கருத்-தோட்டமும் அந்நாட்டு அரசுக்குப் புலப்படவில்லை.

'விலங்கொடு மக்கள் அனையர்; இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்' என்று எண்ணுவது நமது பாரம்பரியம். 'அமைதியாக வும், கட்டுப்பாட்டுடனும் வாழும் விலங்கினங்களுடனே நான் காலத்தைக் கழிக்க விரும்புகிறேன்' என்று வால்ட் விட்மன் எனும் அமெரிக்க கவிஞன் கூறுவது ஈண்டு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

பாகிஸ்தானில் அகமதியப் பிரிவினர் தங்களை முகமதியர் என்று சொல்லிக் கொண்டாலே சிறையில் அடைக்கப்படுகின்றனர். கசையடி கொடுத்தல் சட்டரீதியாக அங்கு வழங்கப்படும் ஒரு தண்டனையாகும். தைவான், தாய்லாந்து, தென்கொரியா நாடு களில் பொது உடைமைக் கொள்கையைப் பாராட்டிப் பேசினாலே சிறைத்தண்டனை வழங்கப்படும்.

அரசினரின் கொள்கைகளை விமர்சித்துப் பேசினாலோ எழுதி-னலோ சிங்கப்பூரில் கடுமையாக அரசினை எதிர்த்த குற்றமாகும். தைவானில் செஞ்சீன வானொலியைக் கேட்பது சட்ட விரோதம். தாய்லாந்தில் மன்னர் குடும்பத்தைப் பற்றி விமர்சனம் செய்வதாகத் தெரிந்தாலே குறைந்தது ஐந்து ஆண்டுகாலம் சிறைக்குச் செல்ல நேரிடும். மன்னர் வீரேந்திர விக்ரம்ஷா ஆட்சிசெய்யும் நேபாளத்-திலும் ஏறத்தாழ இதே நிலைதான். அந்நாட்டின் சட்டமன்ற உறுப்-பினரான ரூப்சந்த் பிஸ்தா தேர்தல் காலத்தில் அங்கதப்பாடல் ஒன்றனை எழுதி வெளியிட்டபோது அது மன்னர் குடும்பத்துக்கு எதிரான பிரச்சாரமே என்று கருதப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் பெர்டினான்ட் மார்கோஸ் கொடுங்-கோல் ஆட்சி புரிந்த காலத்தில் அரசுக்கு எதிரானவர் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். வருடக்கணக்கில் எந்தவிதமான விசாரணையும் இல்லை 1986-ஆம் ஆண்டு கொரசான் அக்வினோ என்னும் அம்மையார் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதும், மார்கோஸ் நாட்டை விட்டே ஓடிவிட்டார். தாம் ஆட்சிக்கு வந்ததும் விசாரணையின்றி வருடக்கணக்கில் சிறைப்பட்டுக் கிடந்த அரசியல் கைதிகளை விடுவித்த பெருமை அக்வினோவைச்சாரும். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பிறிதொன்றான கம்போடியா போல்பாட் என்னும் தளபதியின் கட்டுப்பாட்டில் வந்த போது தனது அரசுக்கு எதிரான

வர்களை எப்படித் தண்டித்தார் என்பதை எண்ணுந்தோறும் நெஞ்சு நடுங்கும். அரசியல் கைதியாகக் கருதப்படுவோரின் பின்னங் கைகள் இரண்டும் சேர்த்துக் கட்டப்படும். கெட்டியான பாலிதீன் பையைத் தலைகீழாகக் கவிழ்த்து அந்தக் கைதியின் கழுத்துக்கருகே கொண்டு வந்து தொண்டைப்பகுதியோடு சேர்த்துக் கட்டிவிடுவர். மூச்சுத் திணறி திக்குமுக்காடி சாவதற்குமுன் அந்த மனித உயிர் என்ன பாடுபடும் என்று எண்ணிப்பார்க்கவே முடியவில்லை.

இற்றைக் காலங்களில் நாடு விட்டு நாடு குடிபெயர்ந்து அங்கும் தங்க முடியாமல், புறப்பட்ட இடத்திற்குப் போக முடியாமல் அகதி-களாக அல்லற்படுவோர் உலக முழுதும் லட்சக்கணக்கில் இருக்-கின்றனர். அரசியல் காரணங்களுக்காகப் படுகொலை கடுந்தண்டனை ஆகிய விளைவுகளுக்கு அஞ்சிப் பிறநாடுகளில் தஞ்சம் புகுவோரை மனிதாபிமான அடிப்படையில் அந்நாடுகள் ஏற்றுக் கொள்வது ஒரு மரபு. இப்போது அப்படி இல்லை. கிழக்கு ஜெர்மனி, ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரும் தஞ்சம் புகுந்து விடுதல் எளிதல்ல.

இந்தியாவிலேயே அகதிகள் பற்றிய சிக்கல் தீர்வு காண முடியாதவாறு வளர்ந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் மாநில அரசின் தற்காலிக குடியிருப்புகளில் இப்போது தங்கியுள்ளனர். இவர்களை இலங்கைக்கு அனுப்ப இந்திய அரசினர் திட்டங்களை வகுத்துக் கொண்டுள்ளனர். போர் நின்றபின் அமைதி-யான சூழ்நிலை வந்தாலும். இந்திய மரபு சார்ந்த அகதிகளில் ஒரு பிரிவினர் இலங்கைக்குத் திரும்பிச் செல்லப் போவதில்லை என்கின்றனர் அங்கு சென்றாலும் இலங்கை நாட்டுக் குடி உரிமைக் கிடைக்காது. பாதுகாப்பான வாழ்விற்கும் அங்கு உறுதியில்லை. எனவே இந்தியாவிலேயே இருப்போம்" என்பது அவர்கள் வேண்டு-கோள். "காலப் போக்கில் குடியுரிமை கிடைத்துவிடும். எனவே அவர்கள் மீண்டும் இலங்கைக்கு செல்ல வேண்டும்" என்பது இந்திய அரசினரின் கருத்து. இந்தச் சிக்கலுக்கு எப்படித்தான் முடிவு ஏற்படும் என்பது தெரியவில்லை மனிதர்களாகப் பிறந்து விட்ட இவர்கள் இந்த மண்ணில் தானே வாழ வேண்டும்.

1984 ஆம் ஆண்டுக்கு முன்னால் வியட்நாம் மக்களில் ஒரு பகுதி யினருக்கும் இந்த நிலை தானே ஏற்பட்டது! அமெரிக்க, ரஷ்ய

நாடுகளின் ஆதரவில் தெற்கு வடக்கு வியட்நாம் நாடுகள் பற்பல ஆண்டுகள் போரிட்டுக் கொண்டன. ஆழம் தெரியாமல் காலை விட்ட உணர்வோடு அமெரிக்கா பின் வாங்கிய போது வியட்நாம் முழுதும் பொது உடைமை ஆட்சி மலர்ந்தது. பொது உடைமைக்கு எதிரான-வர்கள் என்று கருதப்பட்டோரும், அமெரிக்க அரசுடன் நெருக்கமாக இருந்தோரும் தங்கள் நாட்டிலேயே இருக்க முடியவில்லை. பெண்டி-ரும், குழந்தைகளும், முதியோரும், இளைஞரும் மீன்பிடிப் படகு-களில் ஏறி தாய்லாந்து. கம்போடியா மற்றும் ஐரோப்பிய நாடு-களுக்குத் தப்பிச் செல்ல முயன்றனர். வழியில் படகு கவிழ்ந்து மாண்டோரும், உணவும் நீரும் இன்றி வாடி வதங்கி மடிந்தோரும், கடற் கொள்ளையரின் கைப்பட்டு மானம் இழந்து, பொருள் இழந்து சிக்கித் தவித்தோரும் பல்லாயிரக் கணக்கில் அடங்குவர் இத்தகு மண்ணின் மைந்தர்களுக்கு உழைத்துப் பிழைக்கவும், ஒதுங்கி வாழ-வும் கூட உரிமையில்லையா? எவர் தான் இவர்களைக் காப்பாற்று-வது? மனிதாபிமானத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சனையை அணுகித் தீர்வு காண்பது யார்? 'மானுடம் வென்றதம்மா' என்று வரும் காப்பியப் புலவனின் கருத்தே பொய்த்து விடுகிறதே! கவிஞனின் வாக்கு பல்லூழி காலந்தோறும் நிலைத்து நிற்க வேண்டாமா! அடிப்படை உரிமைகளுக்கு நியாயமான நேர்மையான தீர்வினை யார் தான் உறுதி செய்வது?

வாழ்ந்து ஆக வேண்டும் என்பது அவர்களது அடிப்படை உரிமை. ஆனால் எந்த நாட்டில் வாழ்வது? இப்படி மனித உரிமைக்-குப் பங்கமும் பாதுகாப்பற்ற நிலையும் வரும் போது ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவது உண்டு. அந்த உலகப் பெருமன்றத்தின் சார்பில் அகதிகள் பிரச்சனையைக் கவனிப்பதற்கென்றே சுவிட்சர்லாந்து நாட்டில் ஒரு அலுவலகம் (UNHCR) இயங்கி வருகிறது. 'அகதிகள்' என்று ஒரு மாதப் பத்திரிக்கையும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் மொழிகளில் அங்கிருந்து வெளியாகிறது. சட்ட ரீதியாக அகதிகளின் பிரச்சனையைத் தீர்ப்பதோடு, இடைக்கால நிவாரணமாக உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றுக்காக ஐக்கிய நாடுகள் சபை கோடிக்-கணக்கில் நிதி உதவி அளிக்கிறது. ரஷ்ய ஆக்கிரமிப்புக்குப்பிறகு பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ள ஆப்கானியக் குடிமக்கள் மூன்று லட்சத்துக்கு மேல் இவர்களின் பராமரிப்புக்கென்று ஐ நா. சபை கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து வருகிறது

ஐக்கிய நாடுகள் சபை எந்தச் சிக்கலை அணுகுவதற்கும்

தீர்வு காண்பதற்கும் பற்பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. தொடர்பு பட்ட இரண்டு நாடுகளும் அப்பெருமன்றத்தின் தீர்ப்பினை ஒத்துக் கொள்ளாமல் இழுபறி நிலைமை ஏற்படுவதும் உண்டு. இந்த இடைப் பட்ட காலத்தில் பாதிக்கப்படுகின்ற மக்கள் பரிதாபமாக இன்னலுறு வதைத் தடுப்பதற்கே மன்னிப்பு நிறுவனம் (Amnesty) முயன்று வருகிறது. தனியார் நிறுவனமாக இயங்கி வரும் இதற்கு எந்த அரசியல் உள்நோக்கமும் இல்லை மனம் போன போக்கில் யாரை-யும் கொடுமைப்படுத்தி அச்செய்தி வெளியில் தெரியாமல் மறைத்து விடலாம் என்று எந்த நாடும் எண்ணிவிட முடியாது. ஏனெனில் மன்னிப்பு நிறுவனம் அந்தந்த நாட்டின் மனித உரிமை பற்றிய அத்து மீறிய செயல்களை அம்பலப்படுத்தி விடுகிறது உலகத்தின் கண்ணோட்டத்துக்கு உட்பட்டு எத்துணைக் காலத்திற்குத் தான் எந்த நாடும் கொடிய செயலைத் தொடர்ந்து செய்ய முடியும்? அது மட்டுமல்ல. அரசியல், மதம் போன்ற காரணங்களை உள்ளிட்டு நியாயமற்ற முறையில் இன்னலடைகின்ற மக்கள் நமக்குக் கை கொடுத்து உதவுதற்கும் ஒரு நிறுவனம் இருக்கிறது என்ற நம்பிக்கை யினையும் இது உண்டு பண்ணுகிறது.

பிராகிருத மொழியில் புதிய அகராதி

பூனாவில் கடந்த எழுபது ஆண்டுகளாக இயங்கி வரும் பந்தர் கார் ஆராய்ச்சி நிறுவனம் பிராகிருத மொழியின் அகராதியினைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. திட்டமிடப் பட்டுள்ள செலவுத் தொகை ரூ 25. லட்சம். பத்தாண்டுகளுக்குள் இப்பணி நிறைவுரும் இதனையொட்டி பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் நிகழ்ந்த விழா வில் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் தலைமை வகித்து நிறு வனத்தின் பணிகளைப் பாராட்டினார்.

வடமொழியோடு தொடர்புடையதும், தொன்மையானதும் இலக்கிய வழக்கோடு நின்றுபோனதும் ஆகிய பிராகிருத மொழியில் அபப்பிரம்சா, பைசாசி, சூசிகா, சவ்ரசேநி, மாகதி, பிராகிருதம் எனும் ஆறுபிரிவுகள் உள்ளன. வால்மீகி, வரருசி போன்ற மாமுனிவர் கள் இம்மொழிக்கு இலக்கணம் செய்துள்ளனர் ஒன்று கூறப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள அகராதியில் ஒருலட்சத்து ஐம்பதாயிரம் சொற்கள் தொகுக்கப்படும். கி.பி.2-ஆம் நூற்றாண்டு வரையிலான சமண, திகம்பர ஆன்மிக இலக்கியங்களிலிருந்தும், பிராகிருதமொழித் தொடர்புடைய எண்பதுக்கு மேற்பட்ட வடமொழி நூல்களிலிருந்துமே இச் சொற்கள் எடுக்கப்படும் என்று தெரிகிறது.

சூரியனுக்கு வந்த துணிச்சல்

மாபாரதப் போரின் பதினெட்டாம் நாள். அன்று போரிட வந்த துரியோதனன் தனது சேனையை இழந்து தன்னந்தனியனாகி விட்டான். ஓடி ஒளிந்தால் பிழைக்கலாம் என்கிற நிலை. வியூகம் வகுத்துப் போரிடுகின்ற வீரர்களினின்றும் சற்றே விலகி வேகமாக நடந்தான். எதிரில் ஒரு சிற்றாறு. அதனைக் கடக்க எண்ணினான். போரிட்டு மடிந்த வீரர்களின் உடலங்கள் ஆறுமுழுதும் மிதந்து வந்து கொண்டிருந்தன. பிணங்களின் மீது நடந்தால் தான் அக்கரைக்குப் போக முடியும். பிணத்தின் மீது கால் வைத்தாலோ, பிணம் நீருக்குள் அமிழ்கிறது ஒவ்வொரு பிணத்தின் மீதும் காலை வைப்பதும் எடுப்பதுமாகத் தவிக்கிறான். ஒரோவொரு பிணம் மட்டும் துரியோதனன் கால் பட்டதும் நீருக்குள் அமிழவில்லை; அத்தோடு ஒரு முறை புரண்டு அவனது கால்கள் மிதித்து நடப்பதற்கேற்ப மார்பைக் காட்டி மல்லாந்து மிதந்தது. இந்தப் புதுமையினைக் கண்டு அயர்ந்துபோன துரியோதனன் ஒரு கணம் குனிந்து அந்தப் பிணத்தைப் பார்த்தான். அதுவேறு யாருமல்ல, அவனது மகனின் பிணமே தான். திடீரென்று துரியனின் சிந்தனையில் ஒரு மாற்றம். போரை விட்டு ஓடுதற்கு விருப்பமின்றி முன்னைய வேகத்தோடும், விருப்பத்தோடும் மீண்டும் போர்க்களம் நோக்கி வந்து பீமனுடன் உக்கிரமாகப் போரிட்டான்.

துரியனுக்கு வந்த துணிச்சலைப் பற்றிய இக்கதை சரளாதாஸ் எழுதிய ஒரிய மொழியின் பாரதக் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியாகும். பாரதப் பெருங்காப்பியம் பெரும்பாலான இந்திய மொழிகளில் ஊடுருவிப் பரந்து கிடக்கிறது. வங்க மொழியில் காசிராம் தாஸ் பாடியுள்ளார். காளிபிரசன்ன சின்கா பாரதக் கதையினை வங்க மொழியில் உரைநடையாக எழுதியுள்ளார். கி மு 12-ஆம் நூற்றாண்டில் நடந்ததாகக் கூறப்படும் பாரதக் கதையினை வடமொழியில் வியாசர் கூற அதனை விக்னேசுவரர் எழுதினார். தமிழில் வில்லி பாரதமே அனைவராலும் விரும்பிப் பயிலப்படுகிறது என்றாலும் நல்லாப்பிள்ளை என்பாராலும் இக்கதை பாடலாகவே எழுதப்பட்டுள்ளது. இக்கதையினை வெண்பாவாகவே எழுதியவர் தொண்டை நாட்டைச் சேர்ந்த பெருந்தேவனார். நற்றிணையிலும் அகநானூற்றிலும் காணப்படும் பெருந்தேவனாரினின்றும் இவரை வேறுபடுத்திக் காட்டுவதற்கென்றே இவரைப்பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று வழங்குகின்றனர்

வடமொழியின் சம்பு காவியங்கள்

உரை நடையும் பாடலுமாகக் கலந்து எழுதப்படும் இலக்கிய வகைக்குச் சம்பு என்று பெயர். வடமொழியில் பயின்று வரும் இந்த இலக்கியப்பிரிவுக்குரிய இலக்கணம் தண்டியாசிரியர் எழுதிய காவ்யா தர்சத்தில் கூறப்பட்டுள்ளது. கருத்தாழம் மிகுந்து, உணர்ச்சி பூர்வ-மாகவும் வருணனையாகவும் வருகின்ற பகுதிகளைப் பாடலாகவும். பிற பகுதிகளை உரைநடையாகவும் எழுதுவது சம்பு காவிய மரபாகும்.

மகிஷ மங்கலம் நாராயணன் நம்பூதிரி (1534 - 1594) வட மொழியில் எழுதிய நைடத சம்பு சிறந்த சிறு காவியமாகப் போற்றப் படுகிறது. கட்டிய மனைவியைக் கானகத்தில் காரிருளில் கைவிட்டுப் போனவன் அல்லவா நளன்! அவன் அருகிலே சலனமின்றி தமயந்தி உறங்குகிறாள். மனது அறிந்தே அவளைப் பிரியப் போகிறோமே என்னும் வேதனையால் நளனுக்கு உறக்கம் வரவில்லை கண்களில் நீர்சொரியப் படுத்திருக்கிறான். உலகாண்ட மன்னனும், அவனது பட்டத்து ராணியும் கூடகோபுர மாடமாளிகையைத் துறந்து கரிய-வெங்கலி சொடரக் கானகம் நண்ணினர். பாழடைந்த மண்டபம் ஒன்றில் படுத்தனர் அவர்கள் இருவரும் போர்த்திக் கொண்டது ஒரே துணி. தமயந்தி உறங்கி விட்டாள். நளனுக்குத் தூக்கம் இல்லை. போர்த்துக் கொண்டிருந்த துணியின் தன் பகுதியை ஒருவாளால் துண்டித்துக் கொண்டு திரும்பிப் பாராமல் நடந்து விடுகிறான்.

இந்தப்பகுதிகள் அனைத்தும் நைடத சம்புவில் மிகவும் உருக்க மான பதினெண் சீர்ப் பாடல் வரிகளால் இயற்றப்பட்டுள்ளன. தமிழில் நளமகாராசன் கதையினை முற்றும் வெண்பாக்களாலேயே மூன்று காண்டங்களாக எழுதியுள்ளார் புகழேந்திப்புலவர் நள-சரிதம் பயில்வோரிடத்து கலியும் அண்டாமல் ஒதுங்கி விடும் என்பது நப் நாட்டில் நிலவி வரும் நம்பிக்கையாகும்.

ஆய்தம் பற்றிய ஆய்வு

பண்டித புலவர்.
வை. தங்கமணி எம் ஏ., பி.எட்.,
திருமங்கலம்

உயிரெழுத்தாகவோ மெய்யெழுத்தாகவோ கருதப்படாமல் தனித்து நிற்கும் ஆய்த எழுத்துக்கு தனிநிலை என்ற பெயரும் உண்டு. இதனுடைய இயக்கத்தினைப் பொறுத்த அளவில், இது தனியாக நிற்காது; தனக்கு முன்னாலே உயிரெழுத்தினையும் பின்னாலே வல்லின எழுத்துகளில் ஏதேனும் ஒன்றனையும் பெற்றே இயங்கும். முக்கோணமான இதன் தோற்றத்தினை மனதிற்கொண்டு சூலம் போன்ற ஒரு ஆயுதத்தினை நினைவு படுத்துவதனால் இது ஆயுதம் என்று வழங்கப்பட்டு பின் ஆய்தம் என்று மருவியிருக்கலாம் என்பர் ஜி யு. போப். ஆய்வுக்குரிய இந்தச் சார்பெழுத்தினைப் பற்றியதே இக்கட்டுரையாகும்.

— **ஆசிரியர்.**

தொல்காப்பியத்தில் எழுத்துக்களின் வகைகள் கூறுமிடத்து:

'எழுத் தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே'

(நூன்மரபு) என்னுமிடத்து முதல் எழுத்துகள் என்று சிறப்பித்துச் சொல்லப் படுவன அகரமுதலை உடையனவும் னகரமாகிய யிறுவாயினை உடையனவு மாகிய முப்பஃது என்றும், சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினை உடைய மூன்று அல்லாத விடத்து என்றும் கூறி;

சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினை உடைய மூன்று எழுத்துகள் யாவை என்பது. 'அவைதாம்'

குற்றியலிகரம் குற்றியல் உகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன' — 2

முதல் எழுத்துகள் முப்பஃது என்றும், சார்பு எழுத்துகள் மூன்று என்றும் ஈண்டு சுட்டப்படுகிறது.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பு எழுத்துகளும் புள்ளிபெறுமா? அன்றி ஆய்தம் மட்டுமே புள்ளி பெறுமா? என்பதே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உரையாசிரியர்களின் கருத்துக்களை முதற்கண் நோக்குவோம்.

குற்றியலிகரம்; குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் புள்ளி பெறும் என்று பேராசிரியர் சங்கயாப்புடையார், மயிலை நாதர்' சிவஞான முனிவர் ஆகியோர் கூறுகின்றனர். ஆனால் ஆய்தம் மட்டுமே புள்ளி பெறும், ஏனைய இரண்டும் புள்ளி பெறுவதில்லை என்று இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும் கருதுகின்றனர்.

நச்சினார்க்கினியார் ஆய்தம் பற்றி விளக்கும் இடத்து 'ஆய்தம் அடுப்புக் கூட்டு போல மூன்று புள்ளி வடிவினதாய் எழுதப்பட்டு வந்தாலும் இக்காலத்தவர் அதனை நடுவு வாங்கி விட்டு எழுதுவர்' என்பர்.

கி. பி. 800-இல் எழுந்த நந்திவர்மன் காலத்துக் காசர் குடிச் செப்பேட்டில் பிறை வடிவின் மேலும் கீழும் புள்ளியுடன் அது எழுதப் பட்டுள்ளதாகக் காணக் கிடக்கிறது. [◡̣̇]

வரகுண பாண்டியன் காலத்து கி. பி. 900-இல் எழுந்துள்ள திருச்செந்தூர் கல்வெட்டில் நேர்க்கோட்டின் மேலும், கீழும் புள்ளி-யுடன் எழுதப்பட்டதாகப் பார்க்கிறோம். [÷] இவற்றோடு அது பற்றிய தற்கால மொழியியலார் கருத்துகளையும் காண்பது நல்லது.

வழுக் கொலி, மாற்றொலி, உறழ்ச்சி ஒலி, அணுகு நெறி, ஓசை விகாரம், உரசொலி என்று இல்லாத பெயர்களை எல்லாம் இதற்குச் சூட்டி மகிழ்கின்றார்கள். இவர்களின் போக்கெல்லாம் ஒலி பற்றியே பேசுகின்றனவே அன்றி வடிவம் பற்றிச் சொல்லவில்லை. ஆகையால் வடிவம் பற்றிக் கூறுவோர்க் கூற்றினை மட்டும் இங்குக் காண்போம்.

' ஆய்தம் ஓர் எழுத்தல்ல அது வெறும் குறியீடே ' என்பார் தெ. பொ. மீ.

' ஆய்தம் வடமொழி ' விசர்க்கத்தின் ' திரிந்த வடிவமாகும்-வடமொழியின் நின்று கடன் வாங்கப்பட்டது என்பர். மு. இராகவையங்கார்.

'முதற்கண் ' ஆய்தம் ஓர் எழுத்தல்ல - அதுவோர் குறியீடே ' என்பாருக்கு, ஆசிரியர் தொல்காப்பியர்.

' சார்ந்து வரல் மரபின் மூன்று, ' என்றும்,
அம்மூன்றில் ஒன்றே,
' ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்

எழுத்தோரன்ன', என்றும் அழுத்தம் திருத்தமாக ஆய்தமும் ஓர் எழுத்து தான் என்று கூறுவதோடு எழுத்துகளின் கால அளவு கூறுமிடத்தும்

' அவ்வியல் நிலையும் ஏனைய மூன்றே', என்று ஆய்தத்தையும் ஓர் எழுத்தாகவே கருதி அளபும் கூறுகிறார்.

மேலும் ஆய்தம் சொற்களில் எவ்வாறு வரும் என்பதனை '
குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி

உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே ' - 38
என்று புணர் மொழியில் அதன் வருகை பற்றியும், மேலும் 40 ஆம் நூர்பாவில் உருவத்தின் கண்ணும், ஓசையின் கண்ணும் ஆய்தம் வரும் என்றும் தெளிவு படுத்துகிறார். ' ஆய்தம் எழுத்தல்ல-அடையாளமே' என்று தொல்காப்பியர் கருதியிருப்பாராயின் மேலே கூறியுள்ள நூற்பாக்கள் எல்லாம் கூறியிருக்க வேண்டியது இல்லை அல்லவா ?

காப்பியர் தான் இவ்வாறு என்றால் இவருக்குப் பின் வந்துள்ள இலக்கணிகள் ஆய்தத்தை எழுத்தாகக் கொள்கிறார்களா ? அன்றி அடையாளமாகக் கொள்கிறார்களா ? என்பதனையும் பார்ப்போம்.

நன்னூலார் சார்பு எழுத்துச்களின் கூட்டத்தில் ஆய்தத்தை எழுத்தெனக் கூறுவதோடு அமையாது அதனை ' முற்றாய்தம் ' ' ஆய்தக் குறுக்கம் ' என்று வேறு பகுத்துக் காட்டி எந்த சார்புக்-கும் இல்லாத சிறப்பினைத் தருகிறார்.

யாப்பருங்கலம் ; அசைக்கு உறுப்பாம் எழுத்தின் வகை கூடுமிடத்து

' உயிரே மெய்யே...... ' (உ) என்ற நூற்பாவில் ' சார்பில் தோன்றும் தன்மைய என்றார்; என்று கூறி அதனை விளக்குமிடத்து;

'குற்றியலிகரம், குற்றியலுகரம்,
ஆய்தப் புள்ளி என்றிவை மூன்றும்
சார்பில் தோன்றும் உரிமையும் உளவே ;

என்று கூறி, ஆய்தம் ஓர் எழுத்தே என்கிறது. மேலும் அவ்வெழுத்துக்கு 'ஆய்தம்' என்று மட்டும் சுட்டாது 'ஆய்தப் புள்ளி' என்று வேறு அதற்குப் பெயர் தருதலையும் காண்கிறோம்.

காரிகையார் யாப்பின் உறுப்பியலில் உறுப்பாக வரும் எழுத்துகளைச் சுட்டுமிடத்து ;

'குறிலே நெடிலே ஆவி குறுகிய மூவுயிர் ஆய்தம்
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய்... அளவு

அசைக் குறுப்பு என்னும் காரிகை கட்டளையாப்பில். அசைக்கு உறுப்பாக 'ஆய்தமும்' வரும் என்று தெளிவாகக் கூறுவதில் இருந்து 'ஆய்தமும்' ஓர் எழுத்தாகக் கொண்டுள்ளார் என்பது தெற்றெனப் புரிகிறது அல்லவா ?

பேராசிரியரும், தொல்காப்பியம் யாப்பதிகாரம், 326 ஆம் நூற்பா' ஒற்றளபெடுப்பினும் அற்றெனமொழிப' என்ற நூற்பாவை விளக்குமிடத்து:

'ஆனா நோயொடு கானலஃதே' என்ற குறுந்தொகை 97-ஆம் பாடலடியை எடுத்துக்காட்டி உயிர்போல ஆய்தம் அலகு காரியம் பெறும் எனக்கருதி ஆய்தத்தை ஓர் எழுத்தாகக் கருதுகிறார்.

இளம் பூரணரும், தொல்காப்பியம் யாப்பதிகாரம் 311 ஆம் நூற்பா:

'அவற்றுள்,
மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந்தனவே என்மனார் புலவர்

என்பதனை விளக்கு - மிடத்து:

ஆய்தமாவது குற்றெழுத்திற்கும், வல்லெழுத்திற்கும் இடைவரும். அஃதாவது 'எஃகு' எனவரும் ஒற்றளபுடையது மெல்லினமும் 'வயலள'வும் ஆய்தமும் அளபெடுக்கும் என்றும் கூறுகிறார்.

'ஙஞணநமன வயலள ஆய்தம்

அளபாங் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே

என்று ஒற்றுகள் அளபெடுக்கும் இடம் நன்னூலார் கூறுமிடத்து ஆய்தத்தினைக் கூறுதலும் நோக்கற் பாலதாகும். ஈண்டு திருக்குறளாரும்

'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி - என்ற குறளில் ஆய்த எழுத்தினை உயிர்போலக் கொண்டு அலகு காரியம் பெறச் செய்திருத்தலையும் நினைவுக்குக் கொணர்தல் வேண்டும்.

ஆக மேலே கூறிய சான்றுகளால் 'ஆய்தம் ஓர் எழுத்தல்ல -அஃது ஓர் அடையாளம்' என்பார் கூற்று முற்றிலும் மறுக்கப் படுதலைக் காணலாம்

ஆய்தம் வடிவில் முப்பாற் புள்ளி' உடையனவே என்பன போல அமைந்துள்ள சான்றுகள் சிலவற்றினைச் சான்றோர் செய்யுள்களில் சில காண்போம்.

1. 'வேறு பஃறுகிலினுடங்கி யகில் சுமந்து : என்று திருமுருகாற்றுப்படை 296 ஆம் வரியிலும் ;
2. உருவபஃறேரிளை யோன் ; என்று பொருநராற்றுப்படை 130 ஆம் வரியிலும் ;
3. ' தீம்பஃறாரமுனையின்' என்று பெரும்பாணாற்றுப் படை 361 ஆம் வரியிலும் ;
4. ' எடுத்தெறி எஃகம் பாய்தலின்; என்று முல்லைப்பாட்டு 68 ஆம் வரியிலும் ;
5. ' கிடுகுநிரைத் தெஃகூன்றி' என்று பட்டினப்பாலை 78ஆம் வரியிலும் ;
6. காழ் மண்டெஃகம் களிற்று முகம் ; என்று மலைபடுகடாம் 129 ஆம் வரியிலும் ;
7. ' முதுமை எள்ளல் அஃது அமைகும் ; என்று அகநானூற்று 6-ஆம் பாடலிலும் ;

8. ‘ நினைக்கே அன்று அஃது எமக்கு ’ என்று ஐங்குறுநூறு 46 ஆம் பாடலிலும் ;

9. ‘ ஆயினும் அஃதெறியாது ’ என்று கலித்தொகை 149 ஆம் பாடலிலும் ;

10. ‘ நன்னீர் பஃறுளி ’ என்று புறநானூற்று 9 ஆம் பாடலிலும் ;

11. ‘ யானஃது அஞ்சினேன் ’ என்று நற்றிணை 53 ஆம் பாடலிலும் ;

12. அஃதே தோழி ; என்று குறுந்தொகை 160 ஆம் பாடலிலும் ;

13. ‘ ஒன்றிலங்கு எஃகொடு வாள் ’ என்று பரிபாடல் 10 ஆம் பாடலிலும் ;

14. ‘ எஃகு மீன் ’ — ‘ காழெஃகம் பிடித்தெறிந்து ; என்று பதிற்றுப் பத்து 50, 90 ஆகிய பாடல்களிலும் ;

15. ‘ பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள ’ என்று
சிலப்பதிகாரத்திலும் ;

16. ‘ அஃதொருவன் ’— குறள். 38.
‘ அஃதும் பிறன் பழிப்பது ’ குறள். 49.
‘ அஃதே துணை ’ குதள். 76.
‘ வெஃகின் ’ குறள். 171.

‘ அஃகிஅகன்ற ’ குறள். 175- என்றெல்லாம் திருக்குறளிலும் ஆட்சிப் பெற்று வரும் ஆய்தம், அகச்சான்றாகத் தொல்காப்பியத்தில் ஆட்சிபெற்று வருகிறதா ? எனப் பார்த்தலும் நன்று.

17. ‘ ல்ளஃகான் முன்னர் ’ தொல். எழுத்து : 24
‘ ணனஃகான் முன்னர் ’ தொல். எழுத்து : 26
‘ யஃகான் நிற்றல் ’ தொல். எழுத்து : 27
‘ மஃகான் புள்ளி ’ தொல். எழுத்து : 28

'ஒன்பஃது என்ப'	தொல். எழுத்து : 32
'றஃகான் னஃகான் 'ஆயிரெண்டும்'	தொல். எழுத்து : 94
'அஃதிவண்'	தொல். எழுத்து : 103
'அஃறிணைப்பெயர்'	தொல். எழுத்து : 118
'வஃகான்... அஃகான்'	தொல். எழுத்து : 123
'அஃதென்'	தொல். எழுத்து : 200
'பஃதென் கிளவி'	தொல். எழுத்து : 445
'னஃகான்'	தொல். சொல் : 5
'ளஃகான்'	தொல். சொல் : 6
'ரஃகான்'	தொல். சொல் : 7

18. நன்னூலாரும் :

'அஃகும்'	நன்னூல் : 93.
'அஃறிணை!	நன்னூல் : 121.
'அஃதேகினும்'	நன்னூல் : 167.
'பஃதகற்றி!	நன்னூல் : 193.
'மஃகான்!	நன்னூல் : 211.

என்றெல்லாம் ஆய்தத்திற்கு வடிவம் சுட்டி தமது நூலிலும் வேண்டிய மட்டும் பயிலச் செய்திருப்பது போல ஏனைய குற்றிய. லிகரம், குற்றியலுகரம் ஆகியவைகளுக்குப் புள்ளி வடிவம் சுட்டிற்றிலர்-

தரப்பட்டுள்ள காட்டுகள் தாமா? எனின் முழுமையல்ல. ஒவ்வொரு நூலிலும் ஆய்தம் பயின்று வந்துள்ளன என்று கண்டறிய ஒன்றும் பலவும் தரப்பட்டனவேயன்றி தரப்பட்ட நூல்களின் முழுமையல்ல.

குற்றியலிகரமோ, குற்றியலுகரமோ சிலர் கருதுவது போலப் புள்ளி பெற்ற வடிவுடன், சங்க நூல்களிலும் சங்கம் மருவிய நூல்களிலும், தொல்காப்பியத்திலும் யாண்டும் ஆட்சி பெற்று வருதலைக் காணவில்லை.

ஒரு கால் காப்பியர் காலத்தில் இகரமும், உகரமும் புள்ளி பெற்றுப் பின்னர் படிஎடுப்போரால் விடுபட்டிருக்குமா என்பது ஆய்வுக்-

குரியது உயிர்களின் கால அளவு கூறிவிட்டு - வடிவு கூறும் இடத்திலும் அதனை விடாது...

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' (15) என்று மெய்களின் வடிவு கூறியவர் ..

'எகர ஒகரத் தியற்கையுமற்றே' (16) என்ற நூல்பாவால் 'எ. ஒ', என்ற இரண்டு உயிர் எழுத்துகளும் மெய் போலப் புள்ளி பெற்று நிற்குமென்றும் கூறும் தொல்காப்பியர் குற்றியல் உகரத்திற்குத் தனியியல் வகுத்துப் பெருகியுள்ள குற்றியல் உகரத்தை அமைத்துக்காட்டும் போது 'இகரம் உகரம்' புள்ளி பெறும் என்று சுட்டாது விடுவாரா ?

சிலர் எடுத்ததெற்கெல்லாம் எவையும் பிறமொழியில் இருந்து வந்தன என்று கூறுவதில் மகிழ்வு கொண்டு ஆய்தம் தமிழே இல்லை வடமொழி 'விசர்க்கத்தின்' திரிபு என்று கூறிவிடுகின்றனர்.

இக்கருத்தை திரு வெள்ளை வாரணனார் வடமொழி விசர்க்கம் உயிரோசை இல்லது. ஒலியாத இயல்பினை உடையது என்றும், ஆய்தம் இடையில் வருவது. விசர்க்கம் கடையில் ஒலிப்பது என்றும் முடிவு கூறி மறுப்பது ஈண்டு நோக்கத் தக்கது.

ஆய்தம் வடமொழி விசர்க்க வடிவமல்ல தமிழ் வடிவமே என்று நிறுவிட மேலும் சான்றோர் கூறிய சில பல சான்றுகள் இங்கே காண்போம்.

விசர்க்கம் சொல்லின் இறுதியில் நின்று ஒலிப்பது. ஆனால் ஆய்தம் :

'குறியதன் முன்னர் ஆய்த புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே' - 38.

என்பதால் குற்றெழுத்தின் முன்னரும், உயிரொடு புணர்ந்த வல்ல எழுத்து ஆறன் மேலதாகவுமே ஆய்தப்புள்ளி வரும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

நன்னூலாரும் தொல் காப்பியர் கருத்தினை ஏற்றுக்கொண்டிருப்பதோடு அவர் மொழியையும் பொன்னே போல் போற்றியுள்ளமையும் அறியலாம்.

சங்கர நமச்சிவாயர் ஆய்தம் ஒரு மொழிக் கண்ணும், தொடர் மொழிக் கண்ணும் விதித்த முதல் எழுத்துகள் இருமருங்கும் நின்று எழுப்ப...

'இருசிற கெழுப்ப எழும் உடலது போல்' - இடையெழுத்து ஒலிப்பதன்றி ஒருவாற்றானும் ஈறாய் வரும் தன்மையது அன்றா-கலின் அஃகடிய முதலியவற்றின் கண் திரிந்த ஆய்தம் போலத் தொடர் மொழிக்கண் இடை நிலையது அன்றி விதியீறு அன்றன்று; அதன் உண்மை துணிந்து அதனை இறுதிக்கண் விலக்கி ஒற்றள-பெடை நாற்பத்தியிரண்டு என்று மேல் உரைத்தவாறு இங்ஙனம் வருதல் காண்க.

வீர சோழியம் : மாணிக்கத்திற்கும் மரகதத்திற்கும் இடையே உள்ள படிகம் மாணிக்க ஒளியால் மாணிக்கம் போலவும், மரகத ஒளியால் மரகதம் போலவும் தோன்றினாலும் இந்த இரண்டும் இன்மைபோல உயிரும் அல்லாது மெய்யும் அல்லாத இரண்டனுக்கும் இடை நிற்கும் தன்மை 'நடு ஆய்தம்' என உரைக்கும் என்பார்.

ஆக, வடமொழி விசர்க்கம் சொல்லின் இறுதியில் நிற்பதால்-தமிழில் உள்ள ஆய்தம் மொழியின் இடை நிற்பதால் - இரண்டும் ஒன்றல்ல இரண்டும் வேறு வேறு என்பது என்றும் ஆய்தம் ஆரியத்-தின் நின்று திரிந்தும் அல்ல கடன் வாங்கப்பட்டது அல்ல என்பதும் அறியலாம்.

இதுவரை இங்கு 'ஆய்தம்' ஓர் எழுத்தல்ல அஃதோர் அடை-யாளம்' என்ற கருத்தும்; ஆரியத்தின் விசர்க்க வடிவத்தின் திரிபு-கடன் வாங்கப்பட்டது என்ற கருத்தும் மறுக்கப்பட்டுள்ளது. மொழியி-யலார் கருத்தெல்லாம் ஒலியைப் பற்றியே சொல்கின்றனவன்றி வடிவம் பற்றி சொல்லவில்லை. ஆகையால் அவர் தம் கருத்துகள் நமக்குத் துணை நிற்க வில்லை.

சங்க இலக்கியங்களில் நகைச் சுவை.

டாக்டர். ப. பழனியம்மாள்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை.

முன்னுரை :

உள்ளத்திற்கு நிறைவும் மனத்திற்கு மகிழ்வும் தரக் கூடியது நகைச்சுவை. நகை என்ற சொல்லுக்குப் பதினெட்டுப் பொருள்களைத் தமிழகராதி கூறினாலும் சிரிப்பு என்ற ஒரே பொருளை மையமாகக் கொண்டு இச்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. உலக உயிர்களில் மனிதன் மட்டுமே சிரிக்கும் ஆற்றல் பெற்றவன். மனிதர்களுள் சிரிக்கத் தெரிந்தவர்கள் வாழ்க்கையைத் துன்பமாக எடுத்துக் கொள்வதில்லை வாழ்வில் எதிர்ப்படும் இன்னல்களையும், இடையூறுகளையும் ஏற்றுக் கொண்டு முன்னேறும் மனிதனுக்குச் சிரிப்பே ஊன்று கோலாகவும், படிக்கட்டாகவும் பயன்படுகிறது. துன்பம் வரும் பொழுது அவன் புன்னகை புரிகின்றான். அதனால் துன்பத்தை எதிர்த்து வெல்வதற்குரிய ஆற்றலும் முயற்சியும் அவனிடம் தோன்றுகின்றன. வள்ளுவரும்,

> “ இடுக்கண் வருங்கால் நகுக அதனை
> அடுத்தூர்வ தஃதொப்பதில் ”
>
> (குறள். 621)

என்று கூறியுள்ளார். சிரிப்பது எல்லோருக்கும் எளிது. ஆனால் அச்சிரிப்பை ஏற்படுத்துவதும், அதை ஆராய்வதும் கடினம்.

நகைச் சுவையின் தேவை :

சிரி; சிரித்து நீடு வாழ்ந்திரு என்பது பழமொழி. அதனால் மனித வாழ்வு தழைப்பதற்குச் சிரிப்பு இன்றியமையாதது என்பது புலப்படுகிறது. மலர்ந்த முகமும் இன்சொல்லும் உடையவர்கள் மக்களால் விரும்பப்படுபவர். சிரிக்கத் தெரிந்தவன் இருக்கும் இடத்தில் மகிழ்ச்சியும் இன்பமும் இணைந்திருக்கும். துன்பத்தின் வெம்மையால் வருந்துகின்றவர்களுக்கு அவன் நிழல் தரும் பூஞ்சோலையாகப் பயன்படுகின்றான். நகை விரவிய இன்சொற்களால் தீயவர்களின்

குறைகளை எடுத்துக் கூறும் போது அவர்கள் தம் செயல்களுக்கு நாணித் திருந்தி விடுகிறார்கள். நகைச் சுவையுடன் நடத்தப்படும் பாடங்கள் மாணவர்களின் மனதில் ஆழமாகப்பதிகின்றன. விற்பனைப் பணி, அலுவலகப்பணி, போன்ற எல்லாத் துறைகளுக்கும், நகைச் சுவை இன்றியமையாதது. இவ்வாறு நகைச்சுவை சிரிப்புக்காக மட்டும் அமையாது பயன்தரக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

நகை வெளிப்பாடு :

பேச்சு வழக்கில் மட்டுமல்லாது இலக்கியங்களிலும் நகைச்-சுவை இடம் பெற்றுள்ளது. நாடகங்கள், படக் காட்சிகள், இதழ்கள் முதலிய கலைத்துறைகளிலும் நகைச் சுவையைக் காணலாம். நகை என்னும் சிரிப்பு பற்பல விதங்களில் வெளிப்படுகிறது. விழுந்து விழுந்து சிரித்தல், கலகலவென்று சிரித்தல், குலுங்கக் குலுங்கச் சிரித்தல் வயிறு வலிக்கச் சிரித்தல், வாய்விட்டுச் சிரித்தல், அழுது கொண்டே சிரித்தல். அடங்காச் சிரிப்பு, ஓங்காரச் சிரிப்பு, பொங்கும் சிரிப்பு, வெடி சிரிப்பு, வெண் முல்லைச் சிரிப்பு, கேலியாக நகைத்தல், சிந்தும் சிறுநகை, இளநகை புன்னகை என்றெல்லாம் நகைப்பு பெயர் பெறுகின்றது. நகைச் சுவையை உணர்வதிலும், அதை வெளிப்படுத்து வதிலும் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றான். ஒருவர் சிரிப்பது போன்று மற்றவர் சிரிப்பதில்லை. எவ்வளவு தான் வேடிக்கைக் காட்டினாலும் கூடச் சிலர் சிரிப்பதே இல்லை. மக்கள் அனைவரும் உயர்திணை என்ற நிலையில் ஒன்று போல் தோன்றினாலும், உருவத்தில் வேறுபடுவது போல சிரிப்பு வெளிப்பாட்டிலும் மாறு-பட்டுக் காணப்படுகின்றனர்.

நகைச் சுவையின் காரணம் :

பற்பல காரணங்களாக பல்வேறு சூழ்நிலைகளில் நகைச்சுவை தோன்றுகிறது. இரு பொருள்படும் சொற்களும், மரபு தவறிய சொல் வழக்கும், தவறான இழிசொல் வழக்கும், தவறான மொழி பெயர்ப்புக்களும், பொருத்தமின்மையால் சிற்சில சமயங்களில் நகைப்-பின் நிலைக்களங்களாய் அமைகின்றன. இளஞ்சிறார்களின் நடை உடையும் செயலும், சொற்களும், நகைச் சுவையை ஏற்படுத்து-கின்றன. பைத்தியக்காரர் அறிவற்றோரின் செயல்களும் நகைச்-சுவையை எழுப்புகின்றன. கேலியான உரையாடல்களும், வர்ணனை-களும் நகைப்பினை உண்டு பண்ணுவன. பாரதியாரின் குயிற்பாட்டும் பள்ளு இலக்கியங்களில் மூத்த இளைய பள்ளியர்களின் ஏசல்களும் நகைச் சுவைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் எனலாம்.

நகைச் சுவை வயதிற்கேற்பவும் அவரவர் மனநிலைக் கேற்பவும் மாறுபடுகிறது. சூழலுக் கேற்ப அது வெளிப்படுகிறது. பழுத்த கிழவர்களிடம் கிலு கிலுப்பையை காட்டினால் சிரிக்க மாட்டார்கள். இதே காட்சியினைக் குழந்தை காண்கின்ற பொழுது கலகலவென்று சிரிக்கின்றது. கிலு கிலுப்பையின் ஒலியில் நகைப்புக்கு இடமில்லை. அதைக் கேட்கும், குழந்தையின் மனநிலையே சிரிப்புக்குக் காரணம் ஆகிறது

தண்டு ஊன்றி நடக்கும் முதியவர் கீழே விழுந்து விட்டதைச் சிறுவர்கள் கண்டால் சிரிப்பார்கள். அதே நிகழ்ச்சியைப் பெரியவர். கள் கண்டால் இரக்கப்படுவார்கள். ஒரு பருவத்தினருக்கு நகையை ஏற்படுத்திய நிகழ்ச்சி மற்றொரு பருவத்தினருக்கு இரக்கத்தையும் துன்பத்தையும் தூண்டுகிறது

தொல்காப்பியர் கூறும் நகைச் சுவை :

மக்களின் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகள் புறத்துறுப்புக்களின் வாயிலாக வெளிப்படுகின்றன. அந்த உணர்வுகளே மெய்ப்பாடுகள் எனப்படுகின்றன. இதனையே தொல்காப்பியர்,

“ நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப ” என்று கூறுவார்.

எண் வகை மெய்ப்பாடுகளுடன் பிற்காலத்தார் சாந்தம் என்ற சுவையினைச் சேர்த்து ஒன்பதாகக் கூறுகின்றனர். அவைகளுள் நகையை முதன்மையாக வைத்துச் சிறப்புச் செய்துள்ளார் தொல் காப்பியர். காரணம் பிற சுவைகளைவிட நகைச் சுவையே யாவராலும் விரும்பப்படுகிறது. கவலையை மாற்றுகிறது, அறிவிற்கு விருந்தளிக்கிறது. உடலுக்கு நன்மை பயக்கிறது. எண்வகை மெய்ப்பாடுகளின் இறுதியில் இடம் பெற்றிருப்பது உவகைச் சுவை. நாம் நகைக்கும் உவகைக்கும் வேறுபாடு கருதுவதில்லை. உவகையின் வெளிப்பாடே நகை என்று கருதுகின்றோம். ஆனால் நகையும் உவகையும் வேறுபட்ட இரு சுவைகளாகும். இதனை இளம்பூரணர் நகை நிகழ்ச்சி பற்றிப் பிறப்பது, உவகை சிருங்காரம் பற்றிப் பிறப்பது என்று வேறுபடுத்திக் காட்டுவார்

உலகியலில் நான்கு அடிப்படைகளிலிருந்து நகைச் சுவை தோன்றுகிறது. என்பதை,த் தொல்காப்பியம்

"எள்ளல் இளமை பேதமை மடன் என்று
உள்ளப் பட்ட நகை நான்கென்ப"

எனக் கூறும். எள்ளல் என்பது தாம் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட போது தான் நகுதலும் என இருவகைப்படும். இவ்வாறே ஏனைய ஒவ்வொன்றும் தன்கண் தோன்றுதல், பிறன்கண் தோன்றுதல் என இருவகைப்படும். இதற்குப் பேராசிரியர் ஆரியர் கூறுந்தமிழும் குருடரும், முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும், சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் நகைப்பை ஏற்படுத்தக் கூடியன என்று கூறியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் நகைச் சுவை :

நகைச்சுவை கற்றோரையும் மற்றோரையும் ஒருங்கே ஈர்க்க வல்லது. எந்த இடத்தில், எந்த நேரத்தில், எச்சூழ்நிலையில் எவ்வாறு நகை தோன்றியது என்பதைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் இரு உள்ளங்களின் இதயப் பாலமாக, தலைமக்களின் அன்புப்பாலமாக நகை திகழ்ந்தது. இன்னகையையும் இனிய மொழியையும் இயல்பாகவே வாய்க்கப் பெற்ற காரணத்தால் நன்னுதலாள் தலைவனின் நெஞ்சில் நிலை பெறுகின்றாள். தலைவன் ஒருவன் தான் சிந்தும் முறுவலால் தலைவியின் உள்ளத்தில் இடம் பெறுகிறான். தலைமக்களின் இரு உள்ளங்கள் இணையும் உள்ளுறு புணர்ச்சிக்கு உரமளிப்பது இதழில் தோன்றும் புன்னகையே என்பதைப் பின்வரும் சான்றால் அறியலாம்.

காதல் நகைச் சுவை :

தலைவன் நீண்ட நாட்களாகத் தலைவியின் அன்பைப் பெற முயன்றான். ஒரு நாள் துணிவோடு தலைவியின் இல்லத்தையும் அடைந்து விட்டான். வந்த காரணத்தை மறைத்துத் தாகத்திற்குத் தண்ணீர் வேண்டுவதாகக் கூறினான். அன்னையோ தாகம் உடையவனுக்குத் தண்ணீர் கொடுக்குமாறு தன் மகளை ஏவினாள். மகளும் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க அவளது வளைக்கரத்தைப் பற்றினான் தலைவன் எதிர்பாராத இச் செயலினால் அத்தலைவி அன்னையே! இவனொருவன் செய்த செயலைப்பாராய்! என்று கூவினாள். மகளின் கூக்குரலைக் கேட்ட அன்னை அவசரத்தில் ஓடிவர அச்செயலை மறைத்து 'உண்ணுநீர் விக்கி வருந்தினான் காண்' என்று பொய் கூறினாள் தலைவி. இரக்க உணர்வால்

அன்னையும் அவனது முதுகைப் பலமுறை தடவ, தலைவனோ தலைவியை

" கடைக்கணாற் கொல்வான் போல் நோக்கி நகைக் கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன் "

இவ்வாறு அருகில் இருக்கும் அன்னைக்குத் தெரியாது நகையினால் தன் எண்ணத்தைத் தலைவிக்குப் புலப்படுத்தினான் தலைவன் அவள் உள்ளத்தையும் கவர்ந்தான். மலராத அரும்பினுள் வெளியே புலப்படாத மணம் இருப்பது போலச் சிரிப்பொலி தோன்ற நகைப்பினுள் வெளியே புலனாகாத குறிப்பும் உண்டு.

கைக்கிளை நகைச் சுவை :

மற்றுமொரு தலைவன், தலைவி ஒருத்தி தனியே வருவதைக் கண்டான். அவளின் அன்பைப்பெற முயன்றான். ஆனால் அவனது எண்ணம் அவளிடம் ஈடேறவில்லை. அவனது வார்த்தைகளுக்கு அவள் பதிலேதும் கூறவில்லை. ஒரு தலைக் காமத்தால் வருந்தினான். ஆயினும் அவள் செல்லும் திசை நோக்கி ' உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. உன்னை வெளியில் செல்ல அனுமதித்த பெற்றோர் மீதும் தவறில்லை. கட்டுக்கடங்காத மதயானையைப் பாகர்கள் நீராட்டுவதற்காக வெளியே அழைத்துச் செல்லும் போது வழியிலுள்ள ஆட்களை விலக்கிக் கொள்ளுமாறு பறையறைந்து தெரிவிப்பார்கள் அதுபோல நீ வரும்போது, இதோ ஒரு பெண் ! பேரழகி ! வருகின்றாள் விலகிக் கொள்ளுங்கள் என்று பறையறைந்து அறிவிக்காத அரசனே தவறுடையவன். அரசனைத் தவிர வேறு யாரைக் குறை கூற முடியும் ?

"நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதரவிட்ட நுமரும் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடையான்" (கலி 56 : 29 : 33)

என்று கூறினான். பேரழகி வெளியே செல்வதற்கு முன்பே அறிவிப்புப் பறை முழங்க வேண்டும் என்று கூறித் தலைவன் ஒருதலைக் காமத்தால் பிதற்றுவது படிப்பவர்களுக்கு நகையை ஏற்படுத்துகின்றதல்லவா ?

இயற்கையில் நகைச்சுவை :

நற்றிணைக் காதலி ஒருத்தி, தன் காதலனுடன் தனித்திருந்து உரையாடுகின்றாள். அப்பொழுது அருகில் இருந்த சிறு புன்னை மரமொன்றைக் காட்டி, இதன் அருகிருந்து நம்மோடு சிரித்து மகிழ நாணமாகின்றது என்கின்றாள். காரணம் தாய் சிறுமியாக இருந்த-போது விளையாடி மறந்து விடுத்த புன்னைக் கொட்டையினின்றும் அம்மரம் தோன்றிய தாகவும், பால் பெய்து அன்னை அதனை வளர்த்ததாகவும், அதனால் அது அத்தலைவிக்குத் தமக்கை முறை யாதல் வேண்டும் என்பதாகவும் அன்னை கூறியதாகச் சொல்கிறாள்.

"நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே'' (நற். 172)

இப்பாடலில் அஃறிணைப்பொருளை உயர்திணையாக, தமக்கை உறவு கூறி நாணுவதும், அதற்குப் பாலும் நெய்யும் ஊற்றி அன்னை வளர்த்ததாகக் கூறியிருப்பதும் நகைக்குரிய செயல்களாகும்.

குறுந்தொகைத் தலைவி ஒருத்தி தன் தோழியிடம், "கார் கால மென்னும் பெண் என் ஆற்றா நிலை கண்டு சிரிக்கின்றாளே என்று கூறி ஏங்குகின்றாள்.

"பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்
தொகு முகை இலங்கெயிருக
நகுமே தோழி நறுந்தண் காரே' (குறுங் 120)

கார்கால மாலை நேரத்தில் முல்லை அரும்புகள் மெல்லென மலருங்காட்சி, பிரிவால் வருந்தும் தலைவியைக் கண்டு சிரிப்பதாக அத்தலைவி கூறுகிறாள். தலைவியின் உள்ளத்தில் முல்லையரும்பு கள் எழுப்பிய சிந்தனை தான் எத்தகையது !

உவமையில் நகைச்சுவை :-

உவமை நயத்தோடு கருத்துக்கள் கூறப்படும் போது மேலும் விளக்க முறுகின்றன. நகைச்சுவையில் உவமை சேருகின்ற பொழுது சுவையும் கூடுகின்றது. சங்க இலக்கியப் பாடல்களில் நகைச்சுவை

ததும்பிய உவமைகள் பல காணப் படுகின்றன. தலைவன் ஒருவன் பரத்தையின் இல்லிற்குப் பிரிந்து செல்கின்றான். அங்கு அவளைப் பாராட்டிப் பேசி மகிழ்விக்கின்றான். பின் தலைவியின் நினைவால் தன்னுடைய இல்லிற்குத் திரும்புகிறான். முன்னின்றார் கையும் காலும் தூக்கும் பொழுது தானும் கை கால்களைத் தூக்கும் கண்ணாடியில் தோன்றும் பாவையைப் போல தலைவியின் விருப் பங்களுக் கேற்பச் செயல் படுகின்றான். தலைவனின் செயல்களை,

"கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே" (குறுந்.8)

என்று பரத்தை இகழ்கின்றாள். கண்ணாடியில் தோன்றும் பாவை தனக்கு முன்னின்றார் செய்யும் செயல்களை மட்டுமே செய்யும். அது போல தலைவனும் 'உட்கார்' என்று தலைவி ஆணையிட்டால் உட்காருவான். 'எழுந்திரு' என்று தலைவி கூறினால் தான் எழுந்திருப்பான். இல்லையென்றால் எழுந்திருக்கவே மாட்டான் உட்கார்ந்தே இருப்பான் தலைவி செய்விப்பன செய்வதன்றித் தனக் கென வேறு செயலிலன் என்று பரத்தை இகழ்வதிலும் நகைக்குறிப்பு வெளிப்படுகிறது.

மற்றொரு இடத்தில் 'மோர்காரி தெருவில் வந்தால் தத்தம் கணவரை வெளியே போகாமல் தடுத்து முழுநாளும் தங்களின் வீட்டு வாயிற்கதவை அடைப்பார்களாம் பெண்கள்' (கலி 109 : 24 - 26) இவ்வாறு நாவால் நுகரப்படும் அறுசுவையினும் செவியால் நுகரப் படும் சொற்சுவை பொருட்சுவைகளே என்றும் இன்பம் பயப்பன வாய் உள்ளன

முடிவுரை :

சங்கம் தொட்டு இன்று வரையிலும் வெளிவந்த எல்லா இலக்கியங்களிலும் நகைச்சுவை ஏராளமாக இடம் பெற்றுள்ளது. அதனால் திருக்குறளில் நகைச்சுவை, காப்பியங்களிலும் நகைச்சுவை, சிற்றிலக்கியங்களில் நகைச்சுவை, இக்காலக் கவிதைகளில் நகைச் சுவை என்ற தலைப்புக்களில் மேலும் ஆராயலாம்.

ரோமன் எழுத்துகள் தமிழை வளர்க்குமா?

தமிழ் அறிஞர்களின் ஆழ்ந்த சிந்தனைக்கு உரிய கட்டுரை இது. தொழிலதிபர் மாகாலிங்கம் எழுதியது. தமிழை இப்போதுள்ள எழுத்தில் எழுதுவதற்குப் பதிலாக ரோமன் எழுத்தில் எழுதினால் தமிழைக் கற்போரின் தொகை உலக முழுதும அதிகரிக்கும் என்பது கட்டுரையாளரின் கருத்து. இக்கருத்தினைச் செயற்படுத்தினால் வருகிறான் எனும சொல்லை **Varukiran** *என்று தான் எழுதவேண்டும. இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பழகி வந்த இலக்கிய வளம் மிக்க மொழிக்கு இந்த யோசனை ஒத்துக் கொள்ள கூடியதா? வரலாறு இல்லாத, வழக்காற்றில இல்லாத சிறிய மொழிகளுக்கு இந்த யோசனை சரிதான். தமிழன்பர்களின் இக் கட்டுரை பற்றிய கருத்தைச் செந்தமிழ் வரவேற்கிறது.*

— ஆசிரியர்

தமிழ் வளர்வதற்குப் பல்வேறு வழிகள் இருக்கின்றன. அதில் முக்கியமாக சிந்தித்து நடைமுறைப் படுத்தும்படி செய்யவேண்டியது தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தம் தான்

1948 ஆம் ஆண்டுக்கு முன்னால் இஸ்ரேல் என்று ஒரு நாடே கிடையாது. இஸ்ரேல் என்ற நாடு உருவாவதற்கு முன்னும் பல நாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்கள் அந்தந்த நாட்டு மொழியைத் தான் படித்து வந்தார்கள்

யூதர்களின் மொழி ஹீப்ரு, சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளின் உலக வளர்ச்சியின் தாக்கம் ஹீப்ரு மொழியில் கிடையாது ஏன் அது வெறும் பேச்சு மொழியாக இருந்தது என்றே சொல்லலாம். இன்று இஸ்ரேலில் ஹீப்ரு மொழியை அரிச்சுவடியில் இருந்து டாக்டர் பட்டம் வரை படிக்கும் மொழியாக, இந்தக் காலத்து உலகில் எல்லா விஞ்ஞானத் துறைகளிலும் படிக்கு படிக்குமளவிற்கு நாற்பதே ஆண்டுகளில் ஹீப்ரு மொழியை வளம் உள்ள தற்கால மொழியாக உயர்த்தியிருக்கிறார்கள்.

இந்தோனேஷியா மக்கள் மலாய் மொழியைத்தான் பேசி வந்தார்கள்.

சுகர்ணோ அதற்கு 'பாஷா இந்தோனேஷியா' என்று பெயர் வைத்து ஒரு புது மொழியை உருவாக்கினார். இன்று இந்தோனேஷியா பாஷா இந்தோநேஷிய அரிச்சுவடியில் இருந்து டாக்டர் பட்டம் பெறும் வரை, அதாவது இந்தக் காலத்து எல்லா அறிவுத் துறைகளையும் கொண்ட மொழியாக விளங்குகிறது.

மலாய் மொழிக்கும், பாஷா இந்தோனேஷியா மொழிக்கும் எழுத்துகள் ரோமன் வடிவத்தில் இருக்கின்றன,

உலகின் பழைய மொழிகள் என்று சொல்லப்படுகின்ற எல்லா மொழிகளைவிட தமிழ் பழைமையானது.

உலகத்தின் பழைய மொழிகளுடன் எந்த முறையில் ஒப்பிட்டுப் பார்த்தாலும் தமிழ்எந்த வகையிலும் தாழ்ந்ததாக இல்லை. சொல் வளத்திலும் இலக்கண அமைப்பிலும், காலத்துக்கு ஏற்ப விஞ்ஞான துறைகளையும் மூலமாக மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் அளவுக்குத் தமிழை தமிழ் உயர்த்தத் தமிழ் மொழி தடையாக இல்லை.

ரோமன் எழுத்துகள் எழுதுவதற்கும், படிப்பதற்கும் மிக எளியது ஆங்கில மொழிக்கு நாலு வகை எழுத்துகள் இருக்கின்றன. தமிழுக்கு ஒருவகை ரோமன் எழுத்து மட்டும் போதுமானது.

நாம் இப்போது எண்களில் தமிழ் எண்களை உபயோகிக்க வில்லை. அரேபிய எண்களையும் உபயோகப் படுத்துகின்றோம்.

அதுபோல, தமிழ் எழுத்துகளை ரோமன் எழுத்துகளைக் கொண்டு சீர்திருத்துவதைப் பற்றிச் சிந்திக்கலாம.

தமிழ், ரோமன் ஏழுத்தில் எழுதும் பழக்கம் மட்டும் வந்து. விட்டால், தமிழைக் கற்பவர்களின் தொகை இந்தியாவிலும் மற்ற உலக நாடுகளிலும் மிக விரைவாகப் பெருகி விடும்.

தமிழ் மூலமாகக் கற்கும் கல்வியின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் ஆராய்ச்சிக்கும் இது போதுமான அளவு ஊக்கத்தையும் கொடுக்கும்

மொழியின் ஒலி வடிவமும், அதன் வரி வடிவமும் பிரிக்க முடியாதது என்று சொல்கிறார்கள், தொல்காப்பியமோ, பிற தமிழ்

இலக்கியங்களோ இன்றைய தமிழ் எழுத்துகளில் முதலில் எழுதப்பட வில்லை தமிழின் வரிவடிவம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது. ஒலி வடிவம் மட்டும் மாறவில்லை.

சீனாமொழி, ஜப்பான் மொழி முதலிய வற்றில் எழுத்துகளை ரோமன் எழுத்துக்கு மாற்றுவதற்கு அந்த நாட்டு அரசுகள் தீவிர மாக முயன்று வருகின்றன என்பதை இந்தச் சமயத்தில் நினைவு படுத்த விரும்புகிறேன்.

சம்ஸ்கிருதம்:

சம்ஸ்கிருத இலக்கியங்கள் உலகம் எங்கும் பரவியிருக்கிறது. சமஸ்கிருத இலக்கியங்களை ஆங்கிலத்தில் நூல்களாக அச்சிட்டு உலக மொழி இயல் அறிஞர்களிடையே பரவும்படிச் செய்தார்கள்.

சம்ஸ்கிருத இலக்கியங்கள் இன்று உலகம் முழுவதும் ஆங்கிலத்தில் இருக்கின்றன. இந்த இலக்கியங்களைப் படித்த உலகத்தின் அறிஞர்கள் ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள்.

அவர்களே உலக சம்ஸ்கிருத மாநாடுகள் நடத்தி வருகிறார் கள். சம்ஸ்கிருதத்தின் சிறப்புகளைப் பற்றி உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் சம்ஸ்கிருத அறிஞர்கள் இந்த மாநாடுகளில் கலந்து கொண்டு சம்ஸ்கிருத மொழியைப் பற்றியும், அதில் உள்ள இலக்கியங்கள்ளைப் பற்றியும் ஆய்வு செய்து புதிய புதிய சம்ஸ்கிருத நூல்களை ஆங்கிலத்தில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் சம்ஸ்கிருதத்தைப் போல உலக மொழி இயல் அறிஞர்கள் சிந்தித்து அதைப் பற்றி ஆய்வு செய்யும் முயற்சியில் ஈடுபடுத்துவதற்கு முயல வேண்டும்

இதற்கு நமது தமிழ் இலக்கியங்கள் ஆங்கிலத்தில் வெளிவர வேண்டும்.

தொல்காப்பியத்தில் இருந்து பாரதிதாசன் வரையில் உள்ள கவிஞர்கள், அறிஞர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் இயற்றிய நூல்களை எல்லாம் உலகில் வாழும் தமிழ் மக்களும் மொழி இயல் அறிஞர்களும் படித்துப் பயன் பெறும் முயற்சியில் ரோமன் எழுத்து சொல்களாக வெளியிடும் பணியில் உடனடியாக ஈடுபட வேண்டும்.

தமிழ் இலக்கிய நூல்களை முதலில் தமிழிலும், அதற்குக் கீழே அப்படியே தமிழ் உச்சரிப்பிலேயே வரிக்குவரி ரோமன் எழுத்திலும் அச்சிட வேண்டும் அதன் விளக்கத்தை ஆங்கிலத்தில் விளக்கி உரை எழுத வேண்டும்.

இந்த முறையில் தமிழ் நூல்களை எல்லாம் அச்சிட்டு உலகம் முழுவதும் பரவி உள்ள தமிழ் மக்களுக்கும் கொடுத்தாலே ஓரளவு தமிழ் மொழி உலகமெல்லாம் பரவும்.

— நன்றி : கணையாழி

புதுமைப்பித்தனும் புதியஉத்தியும்

வர்சீனியா உல்பு எனும் ஆங்கில நாவல் ஆசிரியை மற்றும் அமெரிக்க நாட்டில் ஹென்றி ஜேம்ஸ், வில்லியம் பாக்னர், ஜேம்ஸ் ஜாய்ஸ் போன்ற நாவலாசிரியர்கள் படித்தவுடனே புரிந்து கொள்ள முடியாத ஒரு விசித்திரமான போக்கில் தங்களது நாவல்களை எழுதியுள்ளனர். கதா பாத்திரங்களின் உள்மனப் போக்கில் ஒரே சீராக ஓடிவரும் எண்ணங்களாகக் கற்பனை செய்து அவற்றுக்கு எழுத்துருவம் கொடுக்கும் இந்தப் புதிய போக்கிற்கு 'Stream of consciousness' என்று ஆங்கிலத்தில் பெயரிட்டுள்ளனர். அதனை நனவோடை உத்தி என்று அப்படியே தமிழில் பெயர்த்துக் கொண்டு அதனைத் தமிழ்ச் சிறு கதைகளிலும் நாவல்களிலும் தேடும் முயற்சியில் இன்றை இலக்கியத் திறனாய்வர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் வல்லிக்கண்ணன் எழுதிய நூலொன்றில் புதுமைப் பித்தனது கயிற்றரவு நினைவுப்பாதை ஆகிய இரண்டு சிறுகதை-களிலும் இந்த உத்தி கையாளப்பட்டுள்ளது என்று கூறுகிறார். லா.ச இராமாமிருதம் என்பாரது புதினங்களிலும் இந்த உத்தி காணப்படுகிறது என்பாரும், அதனை இல்லை என்பாருமாகத் திறனாய்வுக் களத்தில் இரண்டு கூறான வாதப்பிரதிவாதிகள் உண்டு. இந்த உத்தியே தமிழில் இல்லை என்றாலும் தமிழுக்கு அது ஒரு குறை இல்லை இலக்கியக் கூறுபாடுகளில் அந்தக் காலம், சமூகம் சிந்தனை ஆகியவற்றை ஒட்டி வளர்ந்து வருகின்ற பல்வேறு திருப்பு முனைகள் எல்லா மொழிகளிலும் ஒரு படித்தாக இருக்கும் என்று கூற இயலாது. இந்தப் பொது உண்மையை ஒத்துக் கொண்டால் பற்பல கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு ஏற்பட்டு விடும்.

கடல் கடந்த கண்ணன்

பீ ஆர். ஸ்வாமி

தாமாகவே விரும்பி துறவு பூண வந்தோருக் கெல்லாம் தொடர்ந்து வைணவ தீக்கை செய்விக்கப் பெற்றது. ஒரு சமயம் ராதாஷ்டமி நாளில் கீத் என்னும் இளைஞன் கீர்த்தனானந்தா எனவும், புரூஸ் பிரமாநந்தா எனவும், ஸ்டீவ் என்பார் ஸத்வ-சொரூப எனவும் பெயர் மாற்றம் செய்விக்கப் பெற்றன. வழக்கம் போல இந்த மாற்றமும் வேள்வித்தீயின் முன்னர் நடந்ததோடன்றி அதனைத் தொடர்ந்து விருந்தும் கொடுக்கப்பட்டது. பின்னர் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் ஹரேகிருஷ்ண இயக்கத்தின் இசைச் சொற்பொழிவு நிகழும் என்னும் சிறு அறிவிப்புத்தாள் ஒன்று அச்-சிடப்பட்டு நியூயார்க் நகரின் கிழக்குப்புறப் பகுதியில் விநியோகிக்-கப்பட்டது. இயக்கத்தைப் பற்றிய செய்தி பரவலாகத் தெரிந்தமை-யான் புதிதாகப் பற்பலர் வழிபாட்டுக்கு வந்து சேரத் தொடங்கினர்.

அவருள் ஆலன் கின்ஸ்பர்க், பீட்டர் ஆர்யோஸ்கி என்னும் இருவர் குறிப்பிடத்தகுந்தோர். ஆலன் முன்னமேயே இந்தியாவுக்கு வந்தவர். இங்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் கும்பமேளா உற்சவத்தைக் கண்டதோடன்றி ஹரேகிருஷ்ண இயக்-கத்தைப்பற்றியும் அறிந்தவர். நியூயார்க் நகரத்தைப் பொறுத்த வரையில், ஆலன் மிகவும் அறிமுகமானவர். எதிலும் தங்குதடை யில்லாத சுதந்திரமும், மனம் போன போக்கில் போகலாம் என்று விதண்டாவாதம் செய்வதில் உரிமையும் அரசியலை எப்படியும் வீழ்த்துகின்ற விழைவும் கொண்டவர். நியூயார்க் நகரில் இளைஞரில் ஒரு பகுதியினர் ஆலனைத் தங்கள் தலைவனாகக் கொள்ளுகின்ற அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர். இப்படிப்பட்ட ஒருவர் தெய்வீகச் சார்புடைய நிகழ்ச்சிக்கு வந்தது அனைவருக்கும் வியப்பாக இருந்-தது. ஆலன் அங்கு வந்ததோடன்றி, ஒரு ஆர்மோனியப் பெட்டி ஒன்றையும் பரிசளித்து மற்றவருடன் அமர்ந்து தானும் ஹரிகிருஷ்ண இசை வழிபாடு நிகழ்த்தினார்.

சுவாமிகள் சீடரான ஹயக்ரீவா என்பார் ஆலனிடம் நெருங்கிப் பழகி அவரை இத்தகைய நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கலந்து கொள்-

ளுமாறு வேண்டிக் கொண்டார். ஆலனைப் போன்ற வெளி அனுபவம் மிக்க ஒருவரின் தேவையும் அப்போது வேண்டியிருந்தது. சுவாமிகளின் விசா ஏறத்தாழ முடிந்து விட்டது. ஒவ்வொரு முறையும் இரண்டு மாத அளவில் நீட்டிப்புச் செய்து கொண்டு வந்து மேற்கொண்டு செய்ய இயலாத நிலை. இதனைக் கேள்வியுற்ற ஆலன் விசா நீட்டிப்பு பற்றிய பொறுப்பையும் அதற்கு ஆகும் செலவையும் தானே ஏற்றுக் கொண்டார்.

சுவாமிகளிடம் அறிமுகம் ஆகியதும், ஆலன் அவரிடம் நெருங்கி வந்து இனிமையோடும், பணிவோடும் பழகினார்.

தமக்கேயுரிய அமைதியோடும் அருள் கனிந்த முகத்தோடும் சுவாமிகளும் அவரிடம் உரையாடினார். மகான் சைதன்யரின் ஆன்மீக வரலாறு குறித்த பல செய்திகளை ஆலனுக்குக் குறிப்பிட்டுக் காட்டினார் இந்தியாவிலே முதன் முதலாக ஒத்துழையாமை இயக்கம் (Civil disobedience movement) ஒருவர் நடத்தினார் என்றால், அது சைதன்யரே ஆவர். கிருஷ்ண சங்கீர்த்தனம் பாடும் ஒரு ஆன்மீகக் குழுவினருக்குத் தலைமை தாங்கி அந்நாளிலேயே ஒரு முகமதிய மன்னனின் மதக்கட்டுப்பாடுகளை எதிர்த்துச் சென்றவர் அவர். ஆலனுக்கு இத்தகைய புதிய செய்திகள் தொடர்ந்து சுவாமிகளைக் கண்டு உரையாடுதற்குரிய உற்சாகத்தை அளித்தது.

''உடை, பழக்க வழக்கங்கள், மனப் போக்கு ஆகிய இவையனைத்துக்கும் அப்பாலே என்னைக் கவர்ந்து இழுக்கும் ஏதோ ஒரு மாயா சக்தி சுவாமிகளிடம் இருக்கிறது. தனிப்பட்ட மேதா விலாசமும் இனிய பண்பும் அதனுள் அடங்கியுள்ளன அவர் சொல்லும் அனைத்தையும் நான் ஒத்துக் கொள்ள முடியாதென்றாலும், அவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை நான் பெரிதும் விரும்புகிறேன்''— ஆலனின் இந்தக் கருத்து சுவாமிகளைப் பற்றி அவர் கொண்டிருந்த மதிப்பைக் காட்டுவதாகும்.

ஆலன் கின்ஸ்பர்க் சுவாமிகளின் வயப்பட்டதில் வியப்பில்லை. சதா காலமும் போதைப் பொருள்களிலும். மயக்க மாத்திரைகளிலும் மூழ்கி ஒழுங்கு முறையின்றித் தாடி மீசையோடு திரிந்து கொண்டிருந்த ஹிப்பிகளின் கும்பல் ஒன்று வழி பாட்டுக்கு வந்து சுவாமிகளிடம் வாக்கு வாதம் செய்து கிருஷ்ணாய இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததுதான் விந்தையிலும் விந்தை. நியூயார்க் நகரத்தின் மில்போர்டு பகுதிதான். இந்த ஹிப்பிகளின் புகலிடம். இவர்களில்

பலர் இந்தியாவுக்கு வந்து சென்றவர்கள். தன்னை மறந்த மோன நிலையினை அடைவதற்குக் கஞ்சாவையும், பழுப்புச் சீனியையும், அபினியையும் சாப்பிட்டுப் பழகியவர்கள். இந்தியாவிலேயே பற்பல சாமியார்கள் அபினியும் கஞ்சாவும் போட்டுக் கொண்டு தான் தவமிருப்பார்கள் என்று கேள்விப்பட்டவர்கள். இவர்களில் பலர் இந்தியாவுக்கு வந்து சென்றதே இந்த அனுபவமும் பெற்றுச் செல்வதற்குத்தான் என்றால் அதில் தவறில்லை.

மில்போர்டு பகுதியின் பெரும்பாலான கடைகளில் போதை மருந்துகள் பொடியாகவும், மருந்தாகவும், புகைக்கின்ற பொருளாகவும் பல்வேறு உருவத்தில் பரிணமித்துக் கொண்டிருந்தன. மோன நிலைக்கு இவைகளே கதி என்று எண்ணிக் கொண்டிருந்த மில்போர்டு கும்பலுக்கு சுவாமிகளைப் பற்றிய செய்தி தெரிந்தது. தாளம் போட்டு, பாடல் பாடி வழிபாடு செய்தாலும் தனை மறந்த மோன நிலையினை அடையலாம் என்ற செய்தி வியப்பாக இருந்தது. கும்பலே ஒரு நாள் இரவு சுவாமிகளைத் தேடி வந்தது. அப்போது சுவாமிகளே கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டிருந்தார் வழிபாடட்டு நிகழ்ச்சி முடிந்தது.

மில்போர்டு கும்பலின் தலைவரைப் போலத் தோன்றியவர் சுவாமிகளைப் பார்த்து கேள்விகள் கேட்டார். கொடுக்கப்பட்ட பதிலும் மேலும் கேட்கப்பட்ட வினாக்களும் கீழ் வருமாறு அமைந்திருந்தன. இறுதி வெற்றி சுவாமிகளுக்கே என்றாலும், எத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளையும். கடந்து இந்த இயக்கம் வெற்றி பெற்று வளர்ந்துள்ளது என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு சான்றாக விளங்குகிறது

'மருந்துகளை உட்கொண்டு தன்னை மறந்து விடுவதில் தவறு என்ன?'

'ஆன்மீக வாழ்வினை மேற்கொள்ளுவோன் எவனும் எந்தப் போதைப் பொருளையும் தொடக்கூடாது என்பது நியதி!

'ஆன்மீக வாழ்வு தருவதாகச் சொல்லப்படுகின்ற தன்னை மறந்த மோனநிலையை இந்த மருந்துகளே தருமானால் அவற்றை உட்கொள்ளுவதில் தவறு என்ன?

ஆன்மீக நெறிக்கும் துறவுக்கும் போதை மருந்துகளே தேவையில்லை. கஞ்சாவை உண்டு கண்களை மூடிக்கொண்டு கடவுளைக்

காண்பேன் என்று சொல்லுவதும், தன்னை மறந்த நிலையில் இருப்பதாக எண்ணுவதும் வெறும் பிரமையே தவிர மோனநிலை அல்ல. —இது சுவாமிகள்.

'நீங்கள் இந்தப் போதைப் பொருள்களை குறிப்பாக போதைப் பொடியை (LSD) அனுபவித்திருக்கிறீர்களா ? — அறியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள விழைகின்றவனின் கேள்வி அல்ல இது. வாதத்தில் வென்று விடுவோம் என்ற நம்பிக்கையில் தொடுக்கப்பட்ட தர்க்க ரீதியான கேள்விக்கணை. எந்த விதமான சலனமும் இன்றி சுவாமிகள் பதிலைத் தொடர்ந்தார்.

''இந்தப் போதைப் பொருள்களை மட்டுமல்ல; காபி, டீ கூட அருந்தியது இல்லை. புகைபிடிக்கும் பழக்கமும் எனக்குக்கிடையாது.

''போதைப் பொருள்களை அருந்தாமலும், புகை பிடிக்கும் பழக்கம் இல்லாமலும், அவை கெடுதல் என்றும், ஆன்மீக நிலைக்கு அவை துணைபுரிய மாட்டா என்றும் உங்களால் எப்படிச் சொல்ல முடிகிறது?'' —ஏதோ தர்க்க ரீதியாக சுவாமிகளை மடக்கி விட்டாற் போன்ற எண்ணமுடன் மில்போர்டு தலைவர் இந்தக் கேள்வியைக் கேட்டு முடித்ததும், தன்னுடைய சகாக்களை நோக்கி முறுவலித்தார், சுவாமிகளிடமிருந்து ஒரிரு நொடிகள் பதில் இல்லை, இலேசான சலசலப்பும் சிரிப்புங்கூட ஆங்காங்கே வெளிப்பட்டது.

எந்தவித பதட்டமோ, கோபமோ, இல்லாமல் வழக்கமான அமைதியான பதிலே வெளிவந்தது.

''எனக்கு இந்தத் தீய பழக்கங்கள் எதுவும் கிடையாது. என்னுடைய சீடர்களில் பலர் அவற்றைக் கைவிட்டுப் பல காலம் ஆகிறது. அவர்களுள் ஒருவரே உங்கள் கேள்விக்கும் பதில் சொல்லுவார் என்று கூறி சுவாமிகள் ஹயக்ரீவனைப் பொருள் பொதிந்த முகத்துடன் பார்த்தார். அந்தப் பார்வையிலே வேறொரு தொனிப் பொருளும் இருந்தது. அனுபவரீதியாகத்தான் பதில் வரவேண்டும் என்றால், அதற்கும் எந்தத் தடையும் இல்லை என்பது போலிருந்தது சுவாமிகளின் பார்வை

ஹயக்ரீவன் எழுந்து நின்று கம்பீரமான குரலில், அனுபவ அறிவோடு பேசினார் 'போதைப்பொடி எந்த அளவு மயக்க நிலையினை கொடுத்தாலும். ஆன்மார்த்தமான ஆழ்நிலை அறிவுக்கு அது

ஈடாகாது. போதையினால் வரும் மயக்கத்தை மோனநிலை என்று கருதினாலும், கொஞ்ச நேரத்தில் போதை தெளிந்ததும் மனிதன் பழைய நிலைக்கு வந்து விடுகிறான். தேவசங்கீர்த்தனமும், தாளமும் பாடலும், ஆடலும் கலந்து ஆண்டவனை வழிபடும் போது கிடைக்கின்ற இன்பத்திற்கும் தெளிவிற்கும் மன நிம்மதிக்கும் ஈடு இணை கிடையாது. போதைப் பொருள் கொடுக்கும் உந்துதல் மனிதன் ராக்கெட்டில் போவது போலத்தான். ராக்கெட் விண்வெளியில் படு வேகமாகத்தான் போகிறது. சுற்றி முடிந்ததும் வீழ்வது மண்ணில் தான். அதுபோல அன்று கிருஷ்ணகானம் இசைத்துக் கொண்டே ஆன்மீக உணர்வில் ஆழ்ந்து போகும் போது கிடைக்கின்ற மன நிம்மதிக்கும் உளநிறைவுக்கும் எல்லையே இல்லை. உடலம் இந்த உலகத்தில் இருக்கும் எனபதன்றி உள்ளமும் உணர்வும் ஏகாந்த நிலைக்குச் சென்று விடும் என்பதை அனுபவித்துப் பாருங்கள்; தெரியும்'' — பட படவென்று பொழிந்து தள்ளினார் ஹயக்ரீவர்.

இந்த நிகழ்ச்சியினைத் தொடர்ந்து நியூயார்க்கில் ஹரே கிருஷ்ண இயக்கத்தை வேறு சில புறநகர்ப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லத் திட்டமிட்டார்கள். டாம்ஸ்கின்பார்க் என்னும் பகுதி பத்து ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பசிய பூங்கா. அதனைச் சுற்றிலும் இளம் சிவப்பு நிறமான பல மாடிகளைக் கொண்ட அடுக்குக் கட்டிடங்கள் உண்டு. வழக்கமான கடைத் தெரு மட்டுமன்றி குடியிருப்புகளும் இங்கு இருந்தன. தென் அமெரிக்க மக்களும், உக்ரேனியர்களும், நீக்ரோக்களும் நிறைந்த பகுதி. இரவும் பகலும் எந்தக் கட்டுப்பாடும் இன்றி போதை மயக்கத்துடன் ஹிப்பிகள் திரிகின்ற பகுதியும் இது தான். இங்குள்ள பூங்காவில் பஜனை நிகழ்ச்சி நடத்துதற்காக சுவாமிகள் ஒரு குழுவினை ஏற்பாடு செய்தார். ஆர்மோனியம், தாளம், சப்பளாக் கட்டை சகிதம் ஆறுபேர் கொண்ட கோஷ்டி பஞ்சகச்சம் கட்டி அந்த தெருக்களில் வலம் வந்தபடியே பூங்காவிற்கு வந்தது. மழுங்க மொட்டை அடித்து மஞ்சள் உடையுடன் வந்த சுவாமிகள் உள்ளிட்டோரை 'ஹே! நவீன புத்தர்' என்று கூச்சலிட்டோரும், 'வேடம் பூண்டு வந்த கம்யூனிஸ்டுகளோ' என்று பார்த்தோரும் அநேகர். போகும் வழியில் எதிர்ப்பட்ட காரிலிருந்து கொண்டே வேடிக்கை பார்த்தனர். அடுக்குக் கட்டிடங்களிலிருந்து ஆணும் பெண்ணுமாக எட்டிப்பார்த்து வியப்புற்றனர். பலர் கிண்டலும் கேலியும் செய்தனர். எதற்கும் அஞ்சாது பஜனைக்குழு பூங்காவில் வந்து ஒக் மரத்தின் அடியில் கம்பளத்தை விரித்து அமர்ந்தது. சுவாமிகள் வடமொழி ஸ்லோகங்களை உச்சரித்தார். 'ஹரேகிருஷ்ண' மந்திரத்தை ஒருங்கே

அனைவரும் உச்சரித்தனர். சுற்றிலும் பற்பலரின் வியப்புக்கும், ஏளனத்துக்கும், கிண்டலுக்கும், கேலிக்கும் ஆட்பட்டாலும், சுவாமி களும் அவருடைய ஆறு அமெரிக்கச் சீடர்களும் எதனைப் பற்றியும் கவலைப்படவில்லை நாய்கள் ஓடி வந்து குரைத்தன. குழந்தைகள் சுற்றி வந்து நின்றன. ராதாகிருஷ்ண பஜனை மட்டும் தொடர்ந்து நடந்தது. இசை நயத்தோடு வடமொழி சுலோகங்களை சுவாமிகள் சொல்லும் போது அனைவரும் கேட்டனர். 'ஹரேகிருஷ்ண' நாமம் தொடங்கிய பஜனை வரும் போது வழக்கம் போல தாளம் போட்டு அனைவரும் பாடினர். காலை 10 மணியளவில் தொடங்கிய நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

பாடலும், தாளமும், மிருதங்கமும் கண்ட பற்பலர் தங்களிட மிருந்த கிடார், மோர்சிங், குழல், ஊதுகருவி, சிறுபறை போன்ற வற்றை எடுத்துக் கொண்டு பஜனைக்கட்டம் வரும்போது தங்களால் இயன்ற இசையொலியை எழுப்பினர். இந்தக்களேபரத்தில் கூட்டம் நிறையச் சேர்ந்து விட்டது. இருப்பினும் சுவாமிகளும் அழுத்தம் திருத்தமாகவும் தெளிவான உச்சரிப்போடும் பஜனையைத் தொடர்ந் தார் ஒரு கட்டத்தில் சுவாமிகள் மேலோட்டமாக்கி கை அசைத் ததும், சிஷ்யர்கள் எழுந்து நடனமாடத் தொடங்கினார். இடவல மாக ஆடி அசைந்து, விண்ணை நோக்கிக் கை கூப்பி ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண, கிருஷ்ண, கிருஷ்ண, ஹரே, ஹரே என்று வழிபாடு செய்தனர். சுவாமிகள் கையில் ஒரு சிறுபறையினை வைத்துக் கொண்டு ஒலித்தார். அந்த ஒலியின் தாளகதிக்கேற்ப அனைவரும் ஆடினர். மாலை 4 மணி வரை பாடலும் ஆடலும் நடந்தது.

சுவாமிகள் பேசத்தொடங்கினார். சங்கீர்த்தனத்துக்கு வந் திருந்த அனைவருக்கும் கை கூப்பி வணக்கம் தெரிவித்தார் சுவாமி கள். மாலை வெய்யிலின் மஞ்சள் நிறம் அந்த பசிய பூங்காவில் எங்கணும் பளிச்சிட்டது. ஏதோ ஒரு மந்திரத்தால் கட்டுண்டவர்கள் மாதிரி அனைவரும் சுவாமிகளையே உற்று நோக்கினர்.'' ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த அரேகிருஷ்ண மந்திரத்தை சுவாமி சைதன்யர் கல்கத்தா நகரின் தெருக்களில் ஒலிக்கச் செய்தார். ஹரே என்றால் தெய்வீக சக்தி என்பது பொருள. கிருஷ்ணா என் பது இறைவனின் திருப்பெயர். உடல். உள்ளம், அறிவு, பூர்வமான நிலைக்கு அப்பாற்பட்டு உயர்ந்த நிலையில் நிற்பதுவே ஆன்மீக நிலை. அந்த நிலையில்தான் அரேகிருஷ்ண மந்திரத்தை நாம் உச் சாடனம் செய்கிறோம். நம்முள் இருக்கும் நல்ல எண்ணங்களை

ஒரு முனைப்படுத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல "இதை யன்றி வேறு வழியில்லை, இரண்டாவது அவென்யூவில் 26-ஆம் எண்ணுள்ள கட்டிடத்திற்கு அனைவரும் வந்து வழிபாட்டில் கலந்து கொள்ளுங்கள்'' — என்று இந்த முறையில் சுவாமிகளின் சொற் பொழிவு சுருக்கமாக அமைந்திருந்தது

சுவாமிகளின் வயது எழுபத்தி ஒன்று. பிருந்தாவனத்திலிருந்து கண்ணன் நாமத்தை இசை வடிவாகக் கொண்டு சென்ற பிரபுபாத சுவாமிகளை அமெரிக்க நாட்டுக் குளிரோ, தள்ளாத முதுமையோ, வேறுபட்ட கலாச்சாரமோ, பொருள் வசதியின்மையோ ஒன்றும் செய்ய முடியவில்லை முயற்சியோடும் உறுதியோடும், கடவுள் நம் பிக்கையோடும் அவர் மேற்கொண்ட அரேகிருஷ்ண இயக்கத்தின் வளர்ச்சியைத் தடை செய்ய முடியவில்லை

இந்தியாவின் பெருமையும் பழைமையும் முன்னமேயே அமெரிக் காவில் பேசப்பட்டது தான் கீதையின் ஆங்கில மொழி பெயர்ப் பினையும். இந்திய நாட்டுப் புராணங்களையும் துருவித்துருவிப் படித் தவர்கள் தான் எமர்சனும் (Emerson) தோருவும் (Thoreau) ; 1893-இல் சிகாகோவில் நிகழ்ந்த உலக மதங்களைப் பற்றிய மாநாட்டில் இந்து மதம் பற்றிய சொற் பொழிவு ஆற்றிப் பெருமை பெற்றவர் விவேகாநந்தர் தானே! இவருள் யாரும் கிருஷ்ண கானம் மெய்ம் மறந்து இசைக்கப்படும் போது ஏற்படும் ஆனந்தமயமான உள் ளுணர்வைப் பற்றிப் பேசியவர்கள் அல்லர். உலக முழுதும் கிருஷ்ண பக்தியினை இசையின் மூலம் வளர்க்கலாம் என்பது பற்றிய சிந்தனை இல்லாதவர்கள்.

மதுவிலும் மங்கையிலும் ஆழ்ந்து கிடக்கும் அமெரிக்கருக்குப் போய் பாகவத பாராயணம் பண்ணுவதை பழைமையிலும் பாரம் பரியத்திலும் ஊறிப்போன இந்தியர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார் கள் என்பதைப் பிரபுபாதர் உணராமல் இல்லை அவருடைய நோக் கம் யாதெனில், தெய்வீக நூல்களை மனிதனாகப் பிறந்த யாரும் படிக்கலாம் கிருஷ்ண பக்தி உலக முழுதும் பரப்பப்பட வேண்டும் என்று தான் பாகவதம் சொல்லுகிறது. மனிதனாகப் பிறந்த எவரை யும் இசைவழியாகவே இறைவனைத் தொழச் செய்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரலாம். "ஹிப்பிகளும் மனித இனத்தைச் சார்ந் தோரே. அமெரிக்க மண்ணும் உலகத்தின் ஒரு பகுதிதான். கண்ண னின் திருப்பெயரை அங்கு சென்று அவர்களையும் தொழச் செய்வதில் தவறு ஒன்றுமில்லை

(தொடரும்)

கவிதை நூல் - வெளியீட்டு விழா

தென்காசி கிளை நூலகக் கட்டிடத்தில் சென்ற ஜனவரித் திங்கள் இரண்டாம் நாள் (2-1-88) 'மன்னியுங்கள்' என்னும் தமிழாக்கக் கவிதை நூல் வெளியிடப்பட்டது. குஜராத் மாநிலக் கல்வி அமைச்சர் ஹஸ்முக் பட்டேலின் (Excuse - me) ஆங்கிலக் கவிதைத் தொகுப்பினைத் தமிழில் பெயர்த்தவர் தமிழ்ப் பேராசிரியர் இந்திர பவானி ஆவர் குற்றாலம் மகளிர் கல்லூரியில் பணியாற்றும் இவரது புனைபெயர் இந்து வரதன். கவிதை நூல்களும், கதைகளும், ஆய்வுக் கட்டுரைகளும் வெளியிட்டுள்ள இவரது இப்போதைய பெயர்ப்பு நூலில் உள்ள இருபத்தேழு கவிதைகளும் உரை வீச்சு எனப்படும் வசன கவிதைகளாகவே உள்ளன பயில்வோரின் உள்ளத்தில் பதிந்து நாவில் நடமாடவேண்டுமாயின் கவிதைக்குக் கருத்தாழம் மட்டுமன்றிச் சொல்லோட்டமும், சுவையும் வேண்டும் என்பதைப் புதுக் கவிதைக் காரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்நூலுள் கவிவணக்கம், நாட்டு வணக்கம், மானுட வணக்கம், என்னும் முறையில் கவிதைகள் அமைந்திருப்பது மூலநூலின் பெருமை யென்றாலும், அதனைத் திறம்பட மொழியாக்கம் செய்ததும் பாராட்டத்தக்கது அல்லவா! Oracle என்பதைக் கணியன் என்று போட்டது மரபு கெடாத பெயர்ப்புக்குச் சிறந்த சான்று. நுனிப்புல், சீட்டுக்கட்டு ஆகிய தலைப்புகளில் வந்துள்ள கவிதைகள் பொருளாழம் மிக்கவை. பிரிவினை உணர்வு நம் நாட்டுக்கு ஆகாது எனும் கருத்து குழந்தைகளுக்குப் போதிப்பது மிகவும் பொருத்தமே. ஏனெனில் அவர்களே நாட்டின் எதிர்கால மன்னர்கள். நூலினைச் சிறப்பித்தும் ஆய்ந்துரைத்தும் பாராட்டியோருள் அகில இந்திய எழுத்தாளர் மன்றத்தைச் சார்ந்த எஸ் வி எஸ். என்று அழைக்கப்படும் திரு. வேங்கடசுப்பிரமணியம், எழுத்தாளரும், சிந்தனையாளரும் ஆகிய திரு. சேவற்கொடியோன், மதுரைப் பல்கலைக் கழகத்தின் டாக்டர். பழனி அரங்கசாமி ஆகியோரும் ஆவர். இலக்கியக் கூட்டமாயினும் நிறைந்த அளவில் கூடியிருந்த ரசிகப் பெருமக்களால் தென்காசிக்குப் பெருமை என்றுதான் சொல்ல வேண்டும். இந்திர பவானி நன்றி தெரிவித்துப் பேசும்போது தனது இலக்கியப்பணிக்கு எந்த இடையூறும் இன்றி ஊக்கம் கொடுக்கின்ற தனது துணைவரை மனதாரப் பாராட்டியது உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது.

நூல் மதிப்புரை

(1) **மொழிபெயர்ப்புக் கவிதை** – நாளையின் அடையாளம்
கவிஞர் - இரா மதிவாணன்
விற்பனை - விஜயா பதிப்பகம், ராஜாவீதி
கோவை - 1

நமது இந்திய பெருநாட்டுக்கு சோவியத் குடியரசும், அமெரிக்காவுமே நெடுங்கால நண்பர்கள் என்றாலும், அமெரிக்க உறவுகூட சிற்சில சமயங்களில் விரிசல் கண்டு விடுகிறது. சோவியத் நட்புக்கோ எந்தச் சோதனையும் வந்ததில்லை. கலாச்சாரப் பிணைப்பும் கூட அப்படித்தான். பாரதி உள்ளிட்ட கவிஞர்களும், சிறுகதையாளர்களும். நாவலாசிரியர்களும் சோவியத் மொழிகளில் பவனி வருகிறார்கள், ரஷ்ய நாட்டு டால்ஸ்டாயும், புஷ்கினும், ஆன்டன் செகாவும் தமிழ் மொழியில் வந்து பலகாலம் ஆகிவிட்டது. இந்தக் கால கட்டத்தில் திரு. மதிவாணன் என்னும் இளங்கவிஞரின் பெயர்ப்புக் கவிதைகள் பதினேழு சோவியத் கவிஞர்களைத் தமிழில் அறிமுகப் படுத்துவது முற்றிலும் பொருத்தமே. ஒரு இளஞரின் தொகுப்பு என்பதாலோ என்னவோ இந்நூலில் காதலைப் பற்றிய கவிதைகள் நிரம்ப உள்ளன. ஆயினும் அப்பட்டமான பாலுணர்வும், துகிலுரிக்கும் விரசமும் இல்லை. இயற்கை ஈந்த எழில் போதும்; நீ போலிச்சாயம் பூச வேண்டாம் என்னும் இளைஞனையும், விண்ணகத்து ஞாயிற்றினை மண்ணக மடந்தையோடு இணைக்கின்ற காதலையும் இந்நூலுள் காண்கிறோம். சுட்டெரித்தாலும் அது சுகமாக இருக்கிறது என்று காதலுக்கு விளக்கம் கூறி

தீயை விட்டு விலகி விட்டால்
அது நம்மைச் சுடுவதில்லை என்று வரும் கவிதைத் தொடர்

'நீரின் தண்மையும் தீயின்வெம்மையும்—சாரச்சார்ந்துதீரத்தீரும்
சாரல் நாடன் கேண்மை சாரச்சாரச்சார்ந்து — தீரத்தீரத்தீர்ப்பு
ஒல்லாவே'

என்னும் சங்கப்பாடலை நினைவூட்டுகிறது. சோவியத் மண்ணே சுகம் என்று மார்தட்டிப் பேசுகின்ற செஞ்சட்டை வீரர்களுக் கெல்லாம் கடவுட் கொள்கை கசந்து விடுகிறது. 'அனைத்தும் அறிந்த ஆண்டவனுக்கே தெரியும்' என்று பேசும் மாஸ்கோ கவிஞன் மாயாகாவ்ஸ்கி அவர்களுக்குச் சுவைப்பானா என்று தெரியவில்லை. தனி மனித

உரிமை சோவியத் மண்ணில் ஒரு தாகமாகவே இருக்கிறது என்கிற பேருண்மை.

மனிதன் என்ற பெயருக்கேற்ற
மாண்புகள் அனைத்தும் வாய்ந்த
மனிதனுக்கு இணையாகா

என்னும் வரிகளில் பக்குவமாக வெளிப்படுத்தப் படுகிறது. 'மது அருந்திய அறிஞன் மடையனாகிப் போனான் — மது அருந்திய மடையன் அறிஞன் ஆனதும் உண்டு' என்று வரும் ரசூலின் கவிதைப் பகுதி ஆழ்ந்த சிந்தனைக் குரியது. மிகச் சிறந்த கருத்தாயினும், சொற்சுவையும் நடையழகும் பொருந்தி வரும்போது அந்தக் கவிதைக் கன்னி எழில் கொஞ்ச முன் வந்து நெஞ்சிலே நின்று வாக்கிலே நடமிடுவாள். அந்தப் பொன்னான வாய்ப்பினை இந்த வசன வீச்சுக் கள் வந்து மண்ணாக்கி விட்டனவே என்னும் தனிப்பட்ட எனது மனக் குறையினை வேதனை ஏன் - சிங்கமும் சிறு நரியும் எனும் இரண்டு கவிதைகள் ஓரளவு போக்கி விட்டன. இந்நூலுள் காணப்படும் அனைத்துக் கவிதைகளும் ஆங்கிலத்திலிருந்து பெயர்க்கப் பட்டவை. ரஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு வந்தனவா அன்றி அம் மொழியிலேயே எழுதப் பட்டனவா என்னும் செய்தியினை முன்னுரை யில் குறிப்பிட்டிருக்கலாம். எனினும் பெயர்ப்பாளர் எமது பாராட்டுக் குரியவர்.

(2)

நூல் : ஸ்ரீரமணோபதேச நூன் மாலை
உரைவிளக்கம் : ஸ்ரீ சாது ஓம் சுவாமிகள்
அருணாசலரமண நிலையம்
11 B மணக்குளவிநாயர் தெரு
திருவண்ணாமலை - 3

அருளார்ந்த சிவானுபூதிச் செல்வராய் விளங்கிய ரமண பகவானது எழு பாடல் நூல்களின் தொகுப்பும், விளக்கவுரையும் அடங்கியுள்ள இந்நூலின் சிறப்பு எளிமையும், இனிமையும் ஆகும். எல்லாம் கடந்த மோன நிலையில் வாழ்ந்தவர் ரமண பகவான். அவரது அருளுக்குப் பாத்திரமானவரில் அயல்நாட்டாரும் அடங்குவர். பகவானைப் பற்றிய ஆங்கில நூற்களைப் படிப்போருக்கு இந்த உண்மை விளங்கும், திருமதி தலையாரர்கான் என்னும் பார்ஸி அம்மையாரும் பகவானின் சீடராய் ஆசிரமத்திலேயே தங்கி ஆங்கில நூல் எழுதியுள்ளார். இவரைப்போன்றே பகவானது அடித் தலத்திலேயே தங்கி அவரது உபதேசங்களைப் பரப்பும் பெருந் தொண்டினை மேற்கொள்ளும் ஓம் சுவாமிகளை ஆன்மீக உலகு நன்கறியும். ஒவ்வொரு பாடலையும் அன்வயப்படுத்தி பொழிப்புரையும் விளக்கமும் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

(3) சித்ர கவிகள் — 7 ரூ.

(4) சூரிய குலக் கள்ளர் சரித்திரம் — 12ரூ.

வெளியீடு : சால்பகம், ராஜப்பா நகர்
தஞ்சாவூர் - 7

இந்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுத் தன் பெயராலேயே அறக்கட்டளை நிறுவி சமய, இலக்கியத் தொண்டாற்றி வரும் உயர் திருவாளர். உ. சுப்ரமணியம் அவர்கள் வெளியிட்ட இவ்விரண்டு நூல்களும் முறையே மறந்து போன செய்யுள் வகை ஒன்றனையும், சோணாடு தழுவிய பழம்பெரும் சமூகத்தின் வரலாற்றினையும் அறிமுகப்படுத்துவனவாகும்.

தண்டியலங்காரம் சொல்லணி இயலில் மடக்கு, சித்திரக் கவிக்குரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது தனித் தமிழ் பயிலும் மாணவர்களுக்கே இதனைப் பாடமாகச் சொல்லிக் கொடுப்பதில்லை. சொகுசாகவே வா்ழ்ந்துவிட விரும்பும் இற்றை நாள் சமுதாயம் கடுமையான யாப்பின் கட்டுப்பாட்டுக்குள் வரும் மடக்கு, யமகம், திரிபு போன்ற கவிதைகளை எழுதுவதில்லை. தமிழிலக்கிய வரலாறு எழுதும் பரிதிமாற் கலைஞரும் சொல்லணிப் புலவர்களைப் பெருமையாகப் பேசவில்லை. இருப்பினும் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தெய்வீகம் வளர்த்த பாங்கினைத் தமிழகம் மறந்துவிடக் கூடாது என்னும் உயரிய நோக்கத்தில் இந்நூலை வெளியிட்டுள்ளனர். விநாயகர், முருகன், சிவன், பராசக்தி, திருமால் ஞாயிறு ஆகிய கடவுளுக்குரிய பக்திப் பனுவல்கள் எழு கூற்றிருக்கை, மாலை மாற்று ஏக பாதம், சதுரங்க பந்தங்களாக இயற்றப்பட்டுள்ளன. ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் ஜகந்நாதாசார்யரின் எளிய உரை அனைவரும் நூலை உணர்ந்து மகிழும் வண்ணம் அமைந்துள்ளது.

ஒரு பழம் பெரும் சமுதாயத்தினை வரலாற்றுக் கண் கொண்டு பார்ப்பதற்கு ஏற்ற முறையில் கள்ளர் சரித்திரத்தை திருக்களர் சுவாமி நாத மாதவராயர் எழுதியுள்ளார் (1926). மறுபதிப்பாக வந்துள்ள இந்நூல் கள்ளர் குலத்தின் தொன்மையினை கல்வெட்டுச் சான்றுகளுடனும், இலக்கிய ஆதாரத்துடனும் நிறுவிக் காட்டுகிறது. தென் இந்திய சாதி வரலாறு எழுதிய தர்ஸ்டன் என்பாரைப் போல பாரபட்சமின்றி கள்ளர் மரபினரில் குறுநில மன்னராயிருந்தோரின் பட்டியலோடு அவர் தம் பட்டப் பெயர்களின் தொகுப்பினையும் விரிவாக ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலை அந்நாட்களில் வெளியிடுவதற்கு சிங்கப்பூரில் வாழ்ந்த இச்சமுதாயப் பெருமக்களும் பேருதவி புரிந்துள்ளனர். இலாப நோக்கமின்றி அடக்க விலையில் வெளியிட்டுள்ள இந்நூல்களின் கட்டுமானமும், அச்சும் சிறப்புற அமைந்துள்ளன.

— அசாமி

மகளிர் தொண்டு

தலைக்கு மேலே கொதிக்குது வெய்யில்
தாரின் பீப்பாய் சேர்ந்து கொதிக்குது!
சாலையில் பெண்கள் கூலி வேலையில்!
அருகே கிளையில் சேலைத் தூளி!
உறங்குது மயங்கி அவரது குழந்தைகள்!
ரோட்டில் பறக்கும் சொகுசுக் காரில்
அமர்ந்து நானும் விரைகின்றேன்!
நேரம் எனக்கு முக்கியம் அன்றோ!
கையில் இருக்கும் மேகஸீன் ஒன்றில்
கண்ணைச் சிமிட்டுது கலர் விளம்பரம்!

வெய்யில் கொடுமை தணித்து விடவும்
மேனியின் அழகை மிருது வாக்கிடும்
மிகவுயர்ந்த ஒரு கிரீமைப் பற்றி!
என்னுள் வதியும் ஏதோ வொன்று
மகளிர் தொண்டின் மகத்துவம் பற்றி
கண்ணீர் வடித்து கதறிப் பேசும்!
செயலும் சொல்லும் சேரவில்லையே?
உலகில் அனைத்தும் உதட்டளவே தான்!

ஆங்கிலத்தில் : **அஸ்முக் பட்டேல்**
தமிழில் : **திரையன்**

திருக்குறள் ஆய்வகம் — ஓர் அறிவிப்பு

அன்புடையீர்,

திருக்குறளுக்கு முன்னர்த் தோன்றிய பழைய உரைகளே யன்றிப்பின்னர் எழுந்த பல புதிய உரைகளையும் குறள் குறித்தெழுதப் பெற்ற உரைநடை நூல்கள், கட்டுரைகள், மலர்கள், இதழ்கள் ஆங்கில மொழிபெயர்ப்புகள், இதுவரை வெளிவாராது குறித்து வைக்கப் பெற்ற புதுக்குறிப்புகள் ஆகியவற்றையும் கண்டு அவற்றிலுள்ள வேறுபட்ட உரைகளைத் தொகுத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்க உரை எது என விளக்கி முடிவு சுட்டியும் 'திருக்குறள் உரை வேற்றுமை' என்னும் பெயரில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்றற்கும் முன்னைய நிலையிலும் விரிவாக எழுதி வெளியிட அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் துறை திட்டமிட்டுள்ளது.

நீங்கள் எழுதிய உரைநூலிலோ, உரைநடை நூலிலோ கட்டுரையிலோ புதிய உரை காணப்படுமாயின் அதுபற்றிய விவரத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள். எழுத்து வடிவம் பெறாது புதிய உரை கண்டிருந்தாலும் அதனைத் தங்கள் பெயரோடு தெரிவிப்பின் "உரை வேற்றுமையில்" நன்றியுடன் சேர்த்துக் கொள்ளப் பெறும். புத்தகமோ கட்டுரையோ இப்பொழுது கிடைத்தல் அரிதெனில் புதிய குறட்செய்தியை மட்டும் எழுதியனுப்பின் உரை வேற்றுமை நூலில் சேர்க்க வாய்ப்பாக இருக்கும்.

திருக்குறள் பயிற்சி பெற்ற அன்பர்கள் தாம் நுண்ணிதிற் கண்ட புதிய உரையைத்தரின் திருக்குறள் உரைவேற்றுமை வாயிலாகத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிவித்துக் குறட் கல்வியை வளர்க்க உதவும். தங்கள் கருத்தினை

டாக்டர். இரா. சாரங்கபாணி,
திருக்குறள் இருக்கை, தமிழ்த் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர் - 608 002.

என்ற முகவரிக்கு எழுதவும்

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SENTAMIL

1.	Place of Publication	:	Madurai
2.	Periodicity of Publication	:	Quarterly
3.	Printer's Name	:	Alavai Printers 153 G, NorthVeli Street, Madurai — 1
4.	Nationality	:	Indian
5.	Address	:	K. S. Kanthaswamy 33, Patchai Natchiamman Koil Street, Madurai - 1
6.	Publisher's Name	:	N.S. Muthumalaichamy B.A.B.L.,
7.	Nationality	:	Indian
8.	Address	:	54, Tamil Sangam Road
9.	Editors's Name	:	N.S. Muthumalaichamy B.A.B.L.,
10.	Nationality	:	Indian
11.	Address	:	54, Tamil Sangam Road. Madurai - 1.
12.	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	:	Madurai Tamil Sangam. 54, Tamil Sangam Road, Madurai - 625 001

I. N.S. Muthumalaichamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

25-3-1988-
DATED :

Sd) N.S. MUTHUMALAICHAMY
SIGNATURE OF PUBLISHER

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச் சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5 00
3	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	5-00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும்உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு	5-00
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை கலம்பக நூல்கள்**	12-00

1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
2 மதுரை மும்மணிக் கோவை
3. சிராமலைக்கோவை
4. கலசைக் கோவை
5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
6. திருவருணைக் கலம்பகம்
7. குருமொழி வினாவிடை

12.	**உலா நூல்கள்**	10-00

1. திருவாரூருலா
2. திருச்சிறு புலியூர் உலா
3. விக்கிரம சோழனுலா
4 கடம்பர் கோவில் உலா
5. தேவையுலா
6. புலவராற்றுப்படை

13.	**பாமாலை நூல்கள்**	12-00

1. திருப்பணிமாலை
2 சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
3. திருக்குற்றாலமாலை
4. திருப்புல்லாணிமாலை
5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
6. கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை
7. கலைசைச் சிலேடை வெண்பா
8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12-00

1 ஸ்ரீமுத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3 திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (மூலமும் உரையும்)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிகைத் திருவிருத்தம்
7. நான்மணிக் கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள் 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

★ ★ ★

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ 8-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர், தேவைக்கு எழுதும் பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை-1

ஆலவாய் ○ சிம்மக்கல், மதுரை.